உ

# பூர்ணபலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீமஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாதவெளியீடு

(ஆணி – JUNE – 2022)

ஸ்ரீ மகாபெரியவா பூர்ண பலத்துடன்



"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்"

# உள்ளடக்க அட்டவணை

தோரணவாயில் .......... 4

எனது பெருமானுக்கு ஒரு துதி.......... 5

சமி (வன்னி மரம்) .......... 7

அன்பே ஆனந்தம் .......... 8

நாளும் கோளும் நலமே .......... 9

பலன் தரும் பதிகங்கள் .......... 17

தனது குருவைப்பற்றி.......... 21

தினமலர் (1) முதல் தரிசனம் .......... 24

பழமை போற்றிய பண்பாளர் .......... 27

ஸ்ரீ பாலப் பெரியவாளின் பாத யாத்திரை .......... 27

நூறாண்டு ஜோதி .......... 35

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணைஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம் மற்றும் வடிவம்: VVSS Trust-இன்நண்பர்கள்

அட்டை படம் மட்டும் கூகிள் படத்தேடல் (Google Image Search) மூலமாய் பெற்றவை. இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.

மற்ற படங்களின் அனைத்து உரிமைகளும் ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.


இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரணவாயில்

## ஆசிரியர் முன்னுரை

அன்பு சொந்தங்களுக்கு நெஞ்சார்ந்த நமஸ்காரம்/ஆசிகள்!

சொல்வதற்கு என்ன இருக்கிறது, தொடர்ந்து நீங்கள் தரும் ஆதரவிற்கு நன்றி என்பதை தவிர? இந்த இதழில் வழக்கமான சில கட்டுரைகள் இடம் பெற வில்லை. மன்னித்துக் கொள்ளவும். காரணம் ஒரு அற்புதமான புத்தகப் பணி. ஆம்! ஸ்ரீ மஹாபெரியவாளின் நூறாண்டு மலர், மறு பதிப்பு பணி. 400-பக்கங்கள் கொண்ட அந்த பொக்கிஷத்தை உங்களுக்கு வழங்க அயராத பணி முடிந்து விட்டது. இனி அச்சகத்தில் இருந்து Final Proof வந்ததும் , இறுதியாக ஒரு பிழை திருத்தம் பார்த்து விட்டால், அச்சுக்கு அனுப்ப வேண்டியதுதான். ஒரு மாத காலத்தில் புஸ்தகம் அச்சாகி வந்துவிடும். வரு ஜூலை கடைசி வாரம் அல்லது ஆகஸ்ட் முதல் வாரம் புத்தகம் விநியோகத்திற்கு தயார். உங்கள் தேவைக்கு பதிவு செய்து வைத்துக் கொள்ளவும்.



*நன்றி வணக்கம்!*

என்றும் உங்கள் ஆதரவை நாடும்,
என்றென்றும் இறைப்பணியில்,
அன்புடன்,
கி.வேணுகோபால்.

*****

# எனது பெருமானுக்கு ஒரு துதி

**ச. இராஜலக்ஷ்மி**



பக்த கோலாஹலனே! தேவராஜா!! நீலவர்ணனே!!!

பக்த கோலாஹலனே! தேவராஜா!! நீலவர்ணனே!!!

நின்பாதமே சரண் என்று பணியும்

என்னையும் இறங்கி அருளும்

ஜகத் குருவே! ஹரனே !!

என்னை ஆளும் நீலவர்ணனே!!

பக்த கோலாஹலனே! தேவராஜா!! நீலவர்ணனே!!!

ருக்மணியின் மணாளா

நர்த்தனமாடும் கோபாலனே !

மயில்பீலி வேணியனே பரமேசா நீலவர்ணனே

ஜகத் குருவே! ஹரனே !!

ஜகத் குருவே! ஹரனே !!

என்னை ஆளும் நீலவர்ணனே!!

பக்த கோலாஹலனே! தேவராஜா!!

பக்த கோலாஹலனே! தேவராஜா!!

நீலவர்ணனே நீலவர்ணனே நீலவர்ணனே !!!

பாகவதாள் மனம் விரும்பும் நீலவர்ணனே

பாகவதாள் மனம் விரும்பும் நீலவர்ணனே

ஜகத் குருவே! ஹரனே !!

ஜகத் குருவே! ஹரனே !!

என்னை ஆளும் நீலவர்ணனே!!

பக்த கோலாஹலனே! தேவராஜா!!

பக்த கோலாஹலனே! தேவராஜா!!

உலகளந்த எந்தன் ஹரனே

புல்லிலும் புழுவிலும் வாழும் என் பரனே

இந்த பூவுலகின் ஜீவன் அனைத்தையும் காத்தருளுமய்யா !

*****

# சமி (வன்னி மரம்)

**வன்னி மரம்:**

அவிட்ட நக்க்ஷத்திற்கு உரிய இந்த மரம் 'அக்னி' ஸ்வரூபமானது. இந்த மரத்தின் அடியில் அமர்ந்துள்ள பிள்ளையார் மிகவும் விசேஷமானவர். இதனை வணங்கி வளம் வந்தால் சனி பகவானின் பாதகமான சஞ்சாரம் முற்றிலுமாய் விலகும்.

வன்னி மரம், பல்வேறு சிறப்புகளை உடைய மரம். வன்னி மரம் வன்னிய இன மக்களின் புனித மரமாகும். சோழ மன்னர்களின் குல மரம் என்னும் சிறப்பு உடையது என்பதனை தஞ்சை பெரியகோவிலிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள 1000 ஆண்டு பழைமையான இம்மரத்தின் மூலம் அறியலாம்.

அநேக ஆலயங்களில் ஸ்தல விருக்க்ஷமாய் விளங்கும் வன்னி மரத்துக்கு நிறையவே ஆன்மீக, மருத்துவ குணங்கள் உண்டு.



இடம்: வேடலில் நாம் வைத்த வன்னி மரம்

*****

# அன்பே ஆனந்தம்

Hi Friends, நான் உங்கள் கணேஷ் ராகவ் என் கடந்த கட்டுரைகளில் வரதர் எனக்கு கொடுத்த வரம் பற்றி கூறியிருந்தேன் என்ன வரம் என்று நீங்கள் யோசிக்கலாம் வேறு ஒன்றும் இல்லை உங்கள் அன்பு தான், கணேஷ் ராகவ் யார் என்று தெரியவில்லை என்றால் கடந்த கட்டுரைகளை படித்தால் தெரியும் மற்றும் Google உதவியையும் நீங்கள் நாடலாம். அன்பு அது என்ன பெரிய விஷயமா என்று பல பேர் , இன்னும் பல பேர் அன்பை உணர்வதும் இல்லை , ஆனால் நீங்கள் இதை புரிந்து கொள்ள வேண்டும் , உங்கள் வாழ்க்கையில் யாரெல்லாம் உங்கள் மீது அன்பு காட்டுவார்கள் என்று நீங்கள் யோசிக்க வேண்டும் முதலில் அம்மா தனக்கு உணவில்லாமல் போனாலும் பிள்ளை பசியை போக்குவார் நாம் அடையும் மகிழ்ச்சசயை கண்டு நம் தாய் தந்தை மகிழ்ச்சி அடைவார்கள் அது தான் அன்பு அது போல நம் சகோதரர்கள் சகோதரிகள் மற்றும் நம் உறவினர்கள் இவர்கள் நம் நலமுடன் இருக்க வேண்டும் என்று நினைத்து செய்யும் காரியங்கள் அனைத்திற்கும் காரணம் அன்பு தான் இதில் ரத்த பந்தம் என்று ஒரு பாலம் உள்ளது இதற்கு அடுத்த படியாக எந்த ரத்த பந்தமும் இல்லாமல் வணக்கங்கள்.

Hi Hello என்று துடங்கி வாடா போடா என்று நீளும் நட்பு மூலம் வரும் அன்பு அளப்பரியது நாம் அவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் விஷயம் அவர்கள் நம்மிடம் பகிர்ந்து கொள்ளும் விஷயம் அதற்கு அவர்கள் தரும் வழிகாட்டுதல், ஆறுதல் மற்றும் அவர்களின் உதவி இதற்கு காரணமும் அன்பு தான் இதேபோல் காதலி அல்லது மனைவி அடுத்து பிள்ளைகள் என்று இந்த அன்பு சுழற்சி தொடரும்.



அன்புக்கு ஒரு தனி சிறப்பு உண்டு இதில் வாங்குபவர் தாண்டி கொடுப்பவர்களுக்கு ஆனந்தம் அதிகம் , அன்பை எதிர்பாராமல் இருப்பது நல்லது .

இதை தான்டி நீங்கள் செய்யும் காரியங்கள் முலம் நாம் யார் எவர் என்று தெரியாமல் வரும் உறவுகளும் அவர்களின் அன்பும் எதை தரும் தெரியுமா வாழ்வில் மிக பெரிய மன நிறைவைத் தரும் இதை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றும் , இந்த அன்பு அனைத்தும் எனக்கு கிடைத்தது , இவை அனைத்தும் எனக்கு கொடுத்து என்னை மகிழ்வித்து என் மேல் அன்பு காட்டினார் என் இறைவன் வரதர்... அன்பாக இருந்து பாருங்கள் வாழ்க்கை சுகமாக இருக்கும் நீங்கள் அனைத்தையும் ரசிக்க தொடங்குவீர், இந்த அன்பு அனுபவம் அலாதியானது அனுபவித்து பாருங்கள்...

அடுத்த கட்டுரையில் சந்திப்போம்.

*****

# நாளும் கோளும் நலமே

அது ஒரு அடுக்குமாடி குடியிருப்பு. அடுத்தடுத்த வீடுகள் வெகு அருகருகே இருந்தன. பட்டாபிசாரின் வீடும், பார்த்திபனின் வீடும் கிரவுண்ட் புளோரில் எதிரெதிரே இருந்தன. பட்டாபிசாரின் வீட்டின் கதவு திறந்திருந்தால் அவர் வீட்டில் பேசுவது எல்லாம் எதிர் வீட்டு பார்த்திபன் காதில் விழும். அன்று தி;ங்கட்கிழமை இரண்டு நாட்கள் விடுமுறை முடிந்து பட்டாபிசார் ஆபீசுக்கு அவசர அவரசமாக கிளம்பி கொண்டிருந்தார். அவர் வீட்டில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் 7.20 காட்டியது.

"கோமதி என்னுடைய ஆபீஸ் பேக் எங்கே? டீபன் பேக் ரெடியா? இன்று ஆபீசில் ஆடிட் என்பது உனக்கு தெரியுமில்லையா. சீக்கிரம் போகாவிட்டால் சிடுமூஞ்சி மேனேஜர் சீறிவிடுவான். சீக்கிரம் தயார் செய் ராகு காலத்திற்கு முன் நான் கிளம்ப வேண்டும்" என்று படபடத்தார் பட்டாபிசார், உள்ளே இருந்த கோமதி அவசர அவசரமாக பேக்கை எல்லாம் பேக் செய்தாள், டைனிங் டேபிள் மீது பட்டாபிசார் ஆபீசுக்கு போவதற்கு தேவையான பொருட்கள் எல்லாம் தயாராக இருந்தன. பட்டாபிசார் வாசலில் சேரில் உட்கார்ந்து சூவை எடுத்து மாட்டினார். "கோமதி எல்லாத்தையும் கொண்டு வா. ராவு காலம் வந்திடும் இன்னும் அஞ்சு நிமிடத்தான் இருக்கு" என்று கூறியவரின் முன் பேக், லாப்;டாப் எல்லாம் பேக்கையும் நீட்டினாள் கோமதி எல்லாத்தையும் மாட்டிக் கொண்டு பைக்கை ஸ்டார்ட் செய்ய கிளம்ப தயாரானார் பட்டாபிசார். அப்போது அடுப்பறையில் இருந்த கோமதி பாம்பு கடித்தவள் போல் அலறி கொண்டு "என்னங்க உங்க ஆபிசு ஆடிட்டிங் பைல்லை பெட்ரூமில் இருந்து எடுத்திட்டீங்களா? என்று கேட்டாள். சரியான" நேரத்தில் ஞாபகப்படுத்தினாய் சீக்கிரம், சீகக்pரம் எடுத்துட்டு வா, என்று பரபரத்தார் பட்டாபிசார், கோமதி ஒட்டமாக சென்று பெட்ரூமில் பைலைத் தேடினாள். அவள் கண்ணுக்கு பைல் அகப்படவில்லை, பெட்ரூமில் இருந்தப்படியே "என்னங்க பைலை எங்கே வச்சீங்க? கிடைக்க மாட்டேங்குது நில்லுங்கோ கொஞ்சம் நீங்களும் வந்து தேடி பாருங்க" என்றாள் கோமதி.

"போகும் போதே அபசகுணமா நிற்க சொல்றே" என்று முணுமுணுத்துக் கொண்டே உள்ளே வந்த பட்டாபிசார் பைலை பெட்ரூமில் உள்ள டிரஸ்ஸிங் டேபிளில் உள்ள டிராயரில் தேடி எடுத்தார். பைலை எடுத்து கொண்டு அவசர அவசரமாக எப்படியும் ராகு காலத்திற்குள் வெளியே சென்று விட வேண்டும் என்ற எண்ணத்தில் வாசற்கதவை நோக்கி விரைந்தார் பட்டாபிசார். அப்பொழுது அவர் சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் ஒரு மணி அடித்து 7.30 ஐ காட்டியது. தலையில் கைவைத்த படியே ஹாலில் உள்ள சோபாவில் பொத்தென்று அமர்ந்தார். "போச்சே போச்சே எல்லாமே போச்சே காலையில் எழுந்திருக்கும் பொழுதே என்

ராசிக்கு சந்திராஷ்டமம் என்று பார்த்த போதே என்ன நடக்குமோ என்று நினச்சேன், அது இப்படியா நடக்கணும்" என்று வாய்விட்டு புலம்பி தள்ளினார்.

இதை செய்வதறியாது பார்த்து கொண்டிருந்த கோமதி "என்னங்க நா வேணா தண்ணி கொண்டு வந்து கொடுக்கட்டா குடிச்சிட்டு கிளம்புறீங்களா?" என்றாள்.

"ராகு காலத்தை உன் தண்ணி என்ன பண்ணும்"

"ஒம்பது மணிக்கு ஆடிட்டரு வருவாரு முக்கியமான ஆடிட்டுன்னு சொன்னீங்களே போகலைனா தப்பில்லையா?"

"தப்புதான் என்ன பண்றது, ராவு காலம் வந்துடுச்சே ராவு காலத்திலே கிளம்பி பிரச்சினையை பெரிசாக்க விரும்பலே நடக்கறது நடக்கட்டும்" என்றார் பட்டாபிசார் ஹால் டிவியின் ரிமோட்டை ஆன் செய்து சேனலை திருப்பி ஜோதிட தகவல் சேனலைப் பார்க்க ஆரம்பித்தாh.; கோமதி கிச்சன் உள் வழக்கம் போல் சென்று வேலைகளை கவனிக்க துவங்கினாள்.

ஹாலின் கடிகாரம் 9-01 –ஐ காட்டியது கோமதி ஆபீசுக்கு கிளம்புறேன். குடத்திலே தண்ணி எடுத்துட்டு எதிரிலே வா" என்றார் பட்டாபிசார். கோமதி "இதோ வரேன் "என்று குடத்துடன் தயாரானாள்.

"சீக்கிரம் வா நீ வரத்துக்குள்ளே வேறே ஏதாவது சகுணம் வந்து இன்னும் பிரச்சனை பண்ணிடப்போகுது" என்றார் பட்டாபிசார்.

குடத்துடன் சென்ற கோமதி கார்டன் பைப்pல் இருந்து தண்ணி எடுத்துட்டு நிறை குடத்துடன் வீட்டு வாசலுக்கு வந்தாள் அவளை பார்த்தப்படியே பட்டாபிசார். "நா போயிட்டுவரேன"; என்றார்.

"ஏங்க இன்னொரு கப் காப்பி குடிச்சிட்டு போறீங்களா",

"இப்பவே லேட்டாயிடுச்சு இதிலே காப்பி வேறேயா" என்று சலித்து கொண்டு வண்டியை ஸ்டார்ட்செய்து கிளம்பினார் பட்டாபிசார்.

அதையெல்லாம் எதித்த வீட்டு வாசலில் இருந்து பேப்பரை படித்து கொண்டே பார்த்து கொண்டிருந்தான் நம் பார்த்திபன். பார்த்திபன் எம்.பி.ஏ படித்துவிட்டு வேலை தேடுவதற்காக தன் பெரியப்பா வீட்டுக்கு வந்திருந்தான். அவன் பெரியப்பா வீடுதான் பட்டாபிசார் வீட்டுக்கு எதிரே உள்ள வீடு. குப்பைக் கொட்டுவதற்காக வெளியே வந்தாள் கோமதி

"என்ன ஆன்ட்டி அங்கிள் இவ்வளவோ சூடாருக்கார்"

"ஆமாம் பார்த்திபா என்னாலே ஒன்னும் டிலே இல்லே நா செய்யறது எல்லாம் செந்திட்டேன். ஏதோ போதாத நேரம் அவர் ஆபீசுக்கு இன்று லேட்டாயிருச்சு" என்றாள் கோமதி.

"ஆன்ட்டி அங்கிளுக்கு ஆபீசு எத்தனை மணிக்கு?"

"அது என்னவோ ஒம்பது மணிக்கு தான் இன்னிக்கு ராவு காலங்கிறதாலே ரண்டு மணி நேரத்துக்கு முன்னாடியே மனுசன் கிளம்பினார். ஆனா அவர் நேரம் அதுவும் சரியா அமையலே"

"என்ன ஆன்ட்டி ஒரு ராவு காலத்துக்காக ஆபீசுக்கே இப்படி லேட்டா போவாங்களா?"

"பார்த்திபா நீ புதுசு அதனாலே உனக்குத் தெரியலே நாளையும்,கோளையும் பார்தது நல்ல காரியங்களைச் செய்யரவங்களை நீ பார்த்திருப்பே ஆனா உங்க அங்கிள் செய்யற காரியம் எல்லாத்துக்குமே நாளையும் கோளையும் பாத்துப்பாரு. இப்படி தான் இவரோட இருவது வருடமா குடும்பம் நடத்திட்டு இருக்கேன். இதனை எல்லாம் மாத்தனும்ன எந்த மகானாவது அவதாரம் எடுத்தாதான் உண்டு" என்று சொன்னபடியே உள்ளே சென்றாள்.

பார்த்திபன் எத்தனையோ மனிதர்களை வாழ்க்கையில் பார்த்திருக்கிறான், ஆனால் இது அவனுக்கு புது அனுபவமாக இருந்தது. சூரியன் மெல்ல மறைந்து இருள் வானத்தை எட்டியது. மணி கிட்டத் தட்ட எட்டு மணியாகும்.

பைக் சத்தம் கேட்டது. பட்டாபிசார் பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே செல்ல கிளம்பினார். அவசர அவசரமாக வெளியே வந்த பார்த்திபன் "குட் ஈவீனிங் அங்கிள் இப்பதான் வேலை முடித்து வரீங்களா எப்படி இருந்தது இன்று உங்க டே" என்று கேட்டான்.

"அதை ஏன் கேட்கிறாய் பார்த்திபா ஒர்ஸ்ட் டே காலையிலே கிளம்பும் போதே லேட்டு ஆடிட்டர் வந்து அரைமணி நேரங்கழித்து நான் ஆபீசுக்கு போனேன். மேனேஜர் கிட்ட சராமாரியாக ராக்கெட்டு வாங்கினேன். போதாக் குறைக்கு என்னுடைய ஜெனரல் மேனேஜர் அப்ரேசல்லே என்னோட இன்கிரிமெண்டை கட் பணிணிட்டான். எல்லாம் என்னுடைய நேரம் இன்னிக்கு என்னோட ராசிக்கு சந்திராஷ்டமம், அதுதான் இவ்வளவும் செஞ்சது" என்றார்.

"அங்கிள் நீங்க மார்னிங் சீக்கிரம் கிளம்பியதை நா கவனிச்;சேன். கிளம்பிய நேரத்துக்கே ஆபீசு போயிருந்தால் இதெல்லாம் நடந்திருக்காது இல்லே அங்கிள்"

"உனக்கு தெரியாது பாhத்;திபா நீ சின்ன பையன் எல்லாம் நாளும். கோளும் செய்யற வேலை நான் டையார்டா இருக்கேன். நாளைக்கு பாக்கலாம்" என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்குள் சென்று கதவைச் சாத்தினார் பட்டாபிசார்.

அடுத்த நாள் காலை புலர்ந்தது. நம் பார்த்திபன் டிப்டாப்பாக டிரஸ் செய்து கொண்டு சூ மாட்டிக் கொண்டிருந்தான். மணி எட்டு நாற்பதைத் தொட்டது. பார்த்திபன் பைலோடு வெளியே கிளம்பினான்.

அப்போது பட்டாபிசார் பைக்கை ஸ்டார்ட் செய்து கொண்டிருந்தார்.

"குட் மார்னிங் அங்கிள் என்ன ஆபீசுக்கு கிளம்பிட்டீங்களா?

"இல்லே பார்த்திபா இன்னிக்கு நா ஆபீசுக்கு லீவு போட்டேன் நேத்து நடந்த டென்சன்லே என்னாலே ஆபீசுக்கு போக முடியல, நீ டிப்டப்பா கிளம்பி இருக்கியே என்ன விசயம்?"

"அங்கிள் எனக்கு இன்னிக்கு ஒரு இன்டர்வியூ இருக்கு அதுக்காக பஸ் பிடிக்கறதுக்கு கிளம்பிட்டு இருக்கேன்"

பார்த்திபன் வீட்டிலிருந்து பஸ்ஸ்டாண்டு பத்து நிமிடம் நடை தூரத்தில் இருக்கும். பட்டாபிசார் பார்த்திபனைப் பார்த்து "சரி பார்த்திபா என்னோடு வா நா அந்த பக்கம் காய்கறி வாங்க போறேன். உன்னை பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடுகிறேன்."

"தாங்க் யூ அங்கிள் கொஞ்சம் வெயிட் பண்ணுங்க நா எல்லாத்தையும் எடுத்துக்கிட்டேனா என்று செக் பண்ணிக்கிறேன். "

"சீக்கிரம் பாhத்திபா சீக்கிரம் எமகண்டம் வரதுக்குள்ளே கிளம்பு, இன்டர்வியூக்கு வேறே போறே"

'ஜஸ்ட் டூ மினிஸ்ட் அங்கிள் நீங்க வண்டியை ஸ்டார்ட் பண்ணுங்க நா வந்துடறேன்."

இரண்டு நிமிஷத்தில் பார்த்திபன் வண்டியில் ஏறினான் பட்டாபிசார் வண்டியை ஓட்டிக் கொண்டே பார்த்திபனிடம் பேசத் துவங்கினார்.

"பார்த்திபா மதுரையிலிருந்து நீ சென்னைக்கு வந்து ஒரு மாசத்துக்கு மேலிருக்குமில்லையா"

"எஸ் அங்கிள்"

"ஏதாவது இன்டர்வியூ செட் ஆச்சா பார்த்திபா"

"நாலஞ்சு இன்டர்வியூ அட்டென்ட் பண்ணியிருக்கேன் அங்கிள் இன்னிக்கும் அட்டென்ட் பண்ணப் போறேன். என்னோட திறமைக்கும் தகுதிக்கும் உண்டானது கிடைக்குமுனு நம்பிக்கிட்டு இருக்கேன்.

"நம்பிக்கை மட்டும் போதாது பார்த்திபா, அதுக்கு நாளும். கோளும் துணையாயிருக்கணும் உனக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?"

"கட்டாயம் இருக்கு அங்கிள் இப்பவும் சாமிகும்பிட்டுதான் கிளம்பி வந்தேன்."

"பார்த்திபா உனக்கு நேரம் நல்லாயிருந்தா எல்லாம் நல்லா வரும் நல்ல நேரத்தைப் பார்த்து நாமதான் அதுக்கு தகுந்த மாதிரி நடந்துக்கணும். இதெல்லாம் உங்களை மாதிரி இருக்கிற பசங்களுக்கு புரியாது."

"அங்கிள் நா அப்படி ஒண்ணும் பெரிசா பாக்கறது இல்லே. எம்மேலே நம்பிக்கை இருக்கு. கடவுள் மேலே வைச்ச நம்பிக்கை காப்பாத்துங்கற நம்பிக்கையும் இருக்கு"

"நா சொல்றது உனக்கு புரியலை பார்த்திபா சொன்னாலும் புரியாது நீ என்ன ராசி என்ன நட்சத்திரம் அத சொல்லு."

"பரணி நட்சத்திரம் மேச ராசி அங்கிள்"

"இந்த ராசிக்கு அவ்வளவு சொல்லிக்கிற மாதிரி இப்ப நடப்பு இல்லை" என்று சொல்லிக் கொண்டே சடன் பிரேக் போட்டார் பட்டாபிசார். அவர் மீது வாரி விழுந்து அவர் தோள்களை இறுக்க பற்றிய பார்த்திபன் "என்ன ஆச்சு அங்கிள்" என்று கேட்டவாறே முன்னே பார்த்தான்.

பட்டாபிசாரின் பைக் முன்னே கார் ஒன்று சடன் பிரேக் அடித்து நின்றது தெரிந்தது. அந்த கார் கட்டாயம் கன்ட்ரோலை இழந்து எதிர்திசையில் ராங் சைடில் வந்திருப்பதும் தெரிந்தது. பைக்கை ஓரத்தில் நிறுத்தி விட்டு பைக்கிலிருந்து இறங்கி கார் ஒட்டுபவனைப் பாhத்து "காரில் வந்தால் கண்ணுமுன்னு தெரியாதா ராங் ரூட்லே வருவாயா அறிவில்லே" என்று திட்டிக் கொண்டே கார் அருகே சென்றார் பட்டாபிசார். அவர் பின்னே பார்த்திபனும் சென்றான். கார் அருகே சென்றதும் காரை ஒட்டி வந்த நபர் கார் ஸ்டேரி;ங் மீது மயங்கி இருப்பது தெரிந்தது அவர் பாhப்;பதற்கு ஏதோ ஒரு பெரிய முதலாளி போல தெரிந்தார். கோட்டு; சூட்டும் டையுமாக ஏதோ மீட்டிங்க்கு போறது போல தெரிந்தது. அறுபது வயதை விரைவில் எட்டி விடுவார் என்பது அவரை பார்க்கும் போதே அவருடைய முகத்திலிருந்து தெரிந்தது.

"யோவ் என்ன குடிச்சிட்டு மயங்கிட்டியா?" என்றார் பட்டாபிசார்.

"அங்கிள் கொஞ்சம் இப்படி தள்ளுங்க "என்று கூறி கார் கதவை திறந்து அவருடைய முகத்தை திருப்பி பார்த்தான் பார்த்திபன். பேச்சு மூச்சு இல்லாமல் மயக்கத்திலிருந்தார் அந்த காரை ஒட்டி வந்த நபர். அவருடைய பல்சை பிடித்து பாத்தான் பாhத்திபன் அது ஏதோ துடித்துக் கொண்டிருந்தது. "அங்கிள் பிளீஸ் ஹெல்ப் பண்ணுங்க இவரை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கிட்டு போவணும், இங்கே எங்கே ஆஸ்பத்திரி பக்கத்திலே இருக்குது"

"இதெல்லாம் உனக்கெதுக்கு பாhத்திபா உன் வேலையை பாரு. ஆல்ரெடி உனக்கு இன்டர்வியூக்கு லேட்டாயிடுச்சு" என்று டைமைப் பாத்தார் பட்டாபிசார். டைம் எமகண்டம் ஒன்பது மணியைக் காட்டியது.

"பேசறத்துக்கு நேரமில்லே ரஸ் அப் ரஸ் அப்" என்று பாhத்திபன் தன் கைகளில் வண்டி ஓட்டியவரை அலேக்காக தூக்கினான்.

"பார்த்திபா என்ன பண்றே நீ"

"அங்கிள்; பிளீஸ் பின்னாடி கதவை ஓபன் பண்ணுங்கோ பிளீஸ் பேசறத்துக்கு நேரமில்லே" வேறு வழியில்லாமல் பட்டாபிசார் பின்னாடி கதவுகளை திறந்து விட பார்த்திபன் அவரை பின்னால் பக்கம் படுக்க வைத்தான்.

"அங்கிள் முன்னால் வந்து உட்காருங்க ஆஸ்பத்திரிக்கு வழி சொல்லுங்க" என்று சொல்லி வண்டியை ஸ்டார்ட் செய்ய துவங்கினான்.

"பார்த்திபா உனக்கு டிரைவிங் தெரியுமா? இங்கே இருந்து பத்து நிமிஷம் தூரத்தில் தான் ஆஸ்பத்திரி இருக்கு"

"தெரியும் அங்கிள் மதுரையில் ஒரு மாசம் டிராவல்ஸில் டிரைவராய் வேலை செய்திருக்கேன்" என்றவாறு வண்டியை சர்ரென்று கிளம்பி விட்டான் பார்த்திபன்.

"எப்படி அங்கிள் போகணும் ரைட்டா லெப்டா:"

"ரைட்டிலே திரும்பி ஸ்டிரைட்டா போ பார்த்திபா நீ தேவையில்லாமல் இந்த வேலையெல்லாம் செய்யறே. இவரு யாரு என்னென்னே தெரியாது. உன்னுடைய இன்டர்வியூவை விட்டுவிட்டு இப்படி பண்றது கொஞ்சம் கூடநல்லாயில்லே இரு நா உன் பெரியப்பாகிட்ட சொல்றேன்."

"எல்லாம் பின்னால் சொல்லிக்கலாம் அங்கிள் யாராய் இருந்தா என்ன? மொத்தத்திலே அவரு ஒரு மனுசன் அதுவும் வயதானவரு, அவரைப் பார்த்தால் குடித்தவரா தெரியல, ஏதோ ஹார்ட் பிராபளம் போல தெரியுது" என்று கூறியவாறே வண்டியை ஆஸ்பத்திரி வாசலை அடைந்தது. பார்த்திபன் மளமளவென்று கீழே இறங்கி ஆஸ்பத்திரியில் இருந்த ஸ்டெரச்சர்காரரை

கூப்பிட்டு எமர்ஜென்ஸி கேருக்கு எடுத்து போக ஹெல்ப் செய்யுமாறு கேட்டான். உடனடியாக எமர்ஜென்ஸிக்கு எடுத்து போனதும், டாக்டரும், நர்சும் வந்து ஸ்டெரச்சரில் உள்ளவரை பார்ப்பதுமாக கண்மூடி கண் திறப்பதற்குள் எல்லாம் நடந்தன. இதையெல்லாம் திருவிழாவில் வேடிக்கை பார்ப்பது போல அங்குள்ள எல்லாவற்றையும் காணதது கண்டதைப் பார்ப்பது போல பார்த்து கொண்டிருந்தார் நம் பட்டாபிசார்.

அப்போது அங்கிருந்து ஒரு நர்சு ஒடிவந்து பார்த்திபனிடம் "யார் இவர் உங்கப்பாவா என்னாச்சு, உங்கள் அட்ரஸ். போன் நம்பர் எல்லா டீடெல்சையும் நம்ம ரிசப்சனில் கொடுத்து பார்மை இமிடியட்டா எமெர்ஜென்சிக்கு அனுப்பச் சொல்லுங்க" என்ற கூறி எமர்ஜென்சி யூனிட்டுக்கு சென்றார்.

பார்த்திபன் பக்கத்திலிருநத் பட்டாபிசாரை பார்த்து "அங்கிள் அவருடைய அட்ரஸ் போன்நம்பர் ஏதவது காரில் கொஞ்சம் கிடைக்குதானு பாருங்க நா ரிசப்சனில் நிக்கிறேன்" என்றான.; "பார்த்திபா இது உனக்கு தேவையில்லாத வேலை இன்டர்வியூவை உட்டுட்டு என்னையும் சேர்த்து இப்படி பண்றது கொஞ்சங்கூட நல்லாயில்ல" என்று முணுமுணுத்தார் பட்டாபிசார். அவர் முகத்தில் எள்ளும். கொள்ளும் வெடித்தது, பார்த்திபனோ "பிளீஸ் அங்கிள் பத்து நிமிடம் யாராவது ஒருத்தருக்கு தகவல் சொல்லிட்டு நம்ம கிளம்பிடலாம்" என்றான்.
பட்டாபிசார் முணுமுணுத்தவாறே பார்த்திபனிடம் கார் கீயை வாங்கி கொண்டு நகர்ந்தார். பார்த்திபன் ரிசப்சன் அருகே நின்றான். நேரம் ஒடியது.
அப்போது உள்ளிலிருந்து வந்த வார்டுபாய் "என்னப்பா நீ இன்னும் பாhம் பில்லப் பண்ணி தரலையா?" என்று கேட்டான. மேலும் "பார்ம் இல்லாமல் இங்கே டிரீட்மெண்ட் நடக்காது. சீக்கிரம் பண்ணுங்க அவருக்கு ஏதோ அட்டாக் வந்து இருக்குமோனு பேசிக்கிறாங்க. சீக்கிரம்" என்று சொல்லி கிளம்பினான்.

பார்த்திபனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. வாசலை பார்த்தால் பட்டாபிசார் வருவதாக தெரியவுமில்லை, பார்ம் எடுத்து பில்லப் பண்ண துவங்கினான். தன் பெரியப்பா வீட்டு அட்ரஸ், தன் போன் நம்பர் எல்லாவற்றையும் பில் செய்தான் பேஷண்டின் உடைய ரிலேசன் என்று எழுதியிருக்கும் இடத்தில் சன் என்று எழுதி மடமடவென்று கையெழுத்திட்டான். கையெழுத்திட்ட பார்ம்மை ரிசப்சனில் கொடுத்தான். அந்த நேரத்தில் ரிசப்சனிலுள்ளவர் "என்ன சார் பேஷன்டின் பேரையே எழுதாமல் இருக்கிறீங்களே பில்லப் பண்ணுங்கள்" என்று பார்ம்மை திருப்பிக் கொடுத்தார்.

பார்த்திபனுக்கு ஒன்றுமே புரியவில்லை அப்போது அவன் அருகே வந்த பட்டாபிசார் "பார்த்திபா கார் முழுக்க தேடிட்டேன் ஒன்னும் கிடைக்கல இது மட்டும் தான் கிடைச்சது" என்று கூறி ஒரு கார்டை கையில் கொடுத்தார். பார்த்திபன் கையில் வாங்கிய கார்டு ஒரு விசிட்டிங் கார்டு அதில் மீனாட்சி சுந்தரம் மேனேஜிங் டைரக்டர் என்று எழுதி கம்பெனியுடைய பேரும், அட்ரசும் போன் நம்பரும் இருந்தது.
பார்த்திபனுக்கு இவர்தான் இந்த கம்பெனியினுடைய மேனேஜிங் டைரக்டராக இருப்பார் போலும் என்று எண்ணிக் கொண்டே இந்த பார்மில் பேஷன்ட் நேம் என்ற இடத்தில் மீனாட்சி சுந்தரம் என்று எழுதி கொடுத்தான். ரிசப்சனில் இருந்து பார்ம் வார்டுபாய் கைக்கு சென்றது. வார்டுபாய் அதை எமர்ஜென்ஸி யூனிட்டுக்கு அவசரமாகக் கொண்டு சென்றான்.
"சார் அட்வான்ஸ் பேமெண்ட்டை கீழே அக்கௌவுன்ட் செக்சனில் கட்டிட்டு வாங்க" என்று ரிசப்சனிஸ்ட் ஒரு சீட்டை பார்த்திபனிடம் கையில் கொடுத்தார்.
"இது வேறாய போதாத குறைக்கு. நம்மது கச்சேரியே ஆசீர்வாத கச்சேரியா ஓடுது இதுலே அடுத்தவனுக்கு வேறே வாசிக்கணுமா?" என்றார் பட்டாபிசார்.
"அங்கிள் கொஞ்சம் பேசாமலிருங்கள் நான் கீழே போயிட்டு வந்திடுறேன்' என்றான் பார்த்திபன்.

"கொண்டு வந்ததே பெரிய தப்பு இப்ப பணம் வேறேயா கட்ட போறே உனக்கு பைத்தியமா பிடிசச்pருக்கு இந்த கிழத்தை அப்படியே விட்டுட்டு வா பண்ணினவரைக்கும் போதும் வேணுமின இந்த கார்டிலே இருக்கிறவங்களைக் கூப்பிட்டு தகவலை சொல்லு"
"கரெட்டு அங்கிள் டையல் பண்றேன்" என்று கார்டிலிலுள்ள நம்பருக்கு தன் செல்போனில் இருந்து டையல் செய்தான். ரிங் போறது. ஆனா எடுக்க வில்லை அதற்குள் ரிசப்சனில் உள்ளவர் "தம்பி இன்னும் நீங்க கீழே போகலையா லேட்டாகுது சீக்கிரம்" என்றார். பார்த்திபன் போனை அணைத்து பாக்கெட்டில் வைத்து கொண்டு கீழேபோக துவங்கினான்.
"என்ன பார்த்திபா பணம் கட்ட போறியா? உங்கிட்ட பணமிருக்கா" என்றார் பட்டாபிசார். "அங்கிள் நா ஊரிலிருந்து கொண்டு வந்த பணம் என் கார்டில் இருக்கிறது. நா கீழே போய் பணத்தை கட்டிட்டு வரேன். இங்கேயே இருங்க" என்று சொல்லி பார்த்திபன் அவசர அவசரமாக கீழே இறங்கினான்.
"பார்த்திபா உன் நேரமும் போயி, இன்டர்வியூம் போயி இப்ப பணமும் போவுது பாத்துக்கோ சொல்றதே கேளு. வா போகலாம்" என்றார்.
"இல்ல அங்கிள் எப்படி வர முடியும் பாதிலே உட்டுட்டு"
"இவர் என்ன உனக்கு சொந்தக்காரா இவ்வளவு நீ ஹெல்ப் பண்றதற்கு"
"சொந்தத்துக்கு மட்டுந்தான் ஹெல்ப் பண்ணனுமுனு யார் அங்கிள் சொன்னா. எல்லாம் மனிசன் தானே" என்று சொல்லி கொண்டு மளமளவென்று படிக்கட்டில் இறங்கினான் பார்த்திபன். பத்து நிமிஷம் கழித்து மேலே வந்த பார்த்திபன் பட்டாபிசாரை பார்த்து "அங்கிள் இதிலே உள்ள ஆபீசு போனுக்கு தகவல் சொல்லியிருக்கேன், ஆபீசு பாரீஸ்கார்னலிலே இருக்குதாம், உடனடிய வரதா அந்த செக்ரெட்டரி சொன்னாரு"
"ஆமாம் பார்த்திபா பணம் கட்டினியா"
"ஆமாம் அங்கிள் எங்கிட்ட இருந்ததிலே இருந்து பத்தாயிரம் ரூபா கட்டினேன்"
"ஏன் பார்த்திபா அவர்கள் வரவரைக்கும் வெயிட்பண்ணக் கூடாது. எதுக்கு அவசரப்பட்டு பணம் கட்டினே"
"இல்லை அங்கிள் இவங்க ஆபீசு பாரீஸ்லே இருக்கிறதாலே இங்கே பெரம்பூர் வரதற்கு எப்படியும் முக்கால் மணி நேரமாகும். அது வரைக்கும் டிரீட்மெண்ட்டை வெயிட் பண்ண வைக்க வேணடாமென்னு நானே பணம் கட்டிட்டேன்?"

"அப்போ ஒரு மணி நேரத்துக்கு இங்க இருக்க போறியா? உன்னோட இன்டர்வியூ என்னவாகிறது?"
"என்ன பண்றது அங்கிள், அவங்க வரவரைக்கும் இருந்துதான் ஆகணும். எப்படியும் லேட்டாயிடுச்சு இன்டர்வியூக்கு போ முடியாது அதனாலே அவங்க வரவரைக்கும் நா வெயிட் பண்றேன் அங்கிள் உங்களுக்கு வேலை இருந்தா சொல்லுங்க நா உங்களை அந்த காரிலே டிராப் பண்ணிடுறேன்."
"நல்லா சொன்ன போடா எவன் வீட்டு சொத்தோ என் சொத்துனு சொன்ன மாதிரி எவனோட காரையோ எடுத்துகிட்டு வந்தது மட்டுமில்லாமே இப்போ அதுலே என்னை வேறே டிராப் பண்ண போறேங்கிறியே, போலீசு. கேசுனு வந்தா யார் பதில் சொல்றது. முதல உம் பெரியப்பாகிட்ட உன்னை பத்தி சொல்லணும்"
"எல்லாம் வீட்டுக்கு போயி சொல்லிக்கலாம் அங்கிள் இப்ப நீங்க போறீங்களா இருக்கீங்களா,"
"வேறே வழி உங்கூடவந்த பாவத்துக்கு முடியறவரைக்கும் இருக்கத்தான் வேணும் என் ஜாதகத்திலே இன்னைக்கு நேரம் சரியில்லே" என்று கூறி பட்டாபிசார் தலையில் கைவைத்துக் கொண்டார்.
அப்போது அங்கு மாட்டப்பட்டிருந்த தினசரி காலண்டர் அவர் கண்முன்பட்டது. அதை பார்த்த பட்டாபிசார் "ஏய் பார்த்திபா உன் ராசி என்ன?"
"மேஷ ராசி அங்கிள் என்னாச்சு அங்கிள்"
"டேய் உன் ராசிக்கு இன்னைக்கு சந்திராஷ்டமம் அதான் உன்னை இன்னைக்கு இப்படி படுத்துது. இன்டர்யுவியூக்கு போக விடாமே கையிலுள்ள பணத்தையும் கொடுக்க வைத்து

இந்த பாடுபடுத்துது" சிரித்து கொண்டே கேட்டு கொண்டிருந்த பார்த்திபன் "உங்களுக்கு இன்னைக்கு என்ன சொல்லுது" என்று நக்கலாக கேட்டான்.

"எனக்கு மிதுன ராசி என் ராசிக்கு இன்னைக்கு லாபம் என்று நல்லாதான் போட்டிருக்கு. அது உன்னை பாக்காமே இருந்திருந்தா நடந்து இருக்கும். உன்னை பார்ததுனாலே இன்னும் என்னெல்லாம் நடக்க போவுதோ" என்று சலித்து கொண்டார்.
"ஒன்னும் நடக்காது அங்கிள் லாபம் வரும் இதுவரைக்கும் வெயிட் பண்ணுங்க" என்று சிரித்து கொண்டே சொல்லிய பார்த்திபன் "இங்கே உக்காருங்க அங்கிள் நா போய் காப்பி வாங்கிட்டு வரேன். நம்ம ரண்டு பேரும் குடிக்கலாம்".

"உன்னோட வந்த தலைவலிக்கு காப்பி ரொம்ப முக்கியம் காப்பி;லே சக்கரை கம்மியா போட்டு வாங்கிட்டு வா" என்றார் பட்டாபிசார்.
பார்த்திபன் காப்பி வாங்கி வந்து இருவரும் குடித்து ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள் நேரம் ஒடியது,அப்போது எமர்ஜென்சி யூனிட்டில் இருந்து வெளியே வந்த நர்சு பார்த்திபனை பார்த்து "பயப்படாதீங்க . உங்கப்பாவுக்கு மைல்டு ஹார்ட் அட்டாக் வந்திருந்தது. இப்போ கரெக்டாக டிரிட்மெண்ட் கொடுத்து ஐசியூலே வைச்சிருக்கோம். கொஞ்ச நேரங்கழிச்சு நீங்க போயி பாக்கலாம். கரெக்டான நேரத்திலே ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கிட்டு வந்தது நல்லதா போச்சு. இந்த மெடிசன் எல்லாம் வாங்கிட்டு வாங்க" என்று சொல்லி ஒரு பிரிஸ்கிரிப்சன் சீட்டை பார்த்திபனிடம் கொடுத்து சென்றாள் நர்சு.

பார்த்திபன் கையில் சீட்டைக் கண்ட பட்டாபிசார் "ஆமா நீ என்ன அவருக்கு பையனா? உங்கிட்ட எதுக்காக அப்பானு சொல்லி கையிலே சீட்டைக் கொடுத்திட்டு போறங்க"
"ஆமா அங்கிள் அவரு என் அப்பானுதான் பார்மில் பில்லப் பண்ணிக் கொடுத்தேன். அதனாலேதான் அங்கிள் டிரீட்மெண்ட் சீக்கிரம் நடந்துச்சு"
"என்னவோ பார்த்திபா எனக்கு கொஞ்சங்கூட பிடிக்கலே,வம்பை நீ விலை கொடுத்து வாங்கிற மாதிரிதான் தோணுது. போலீசு கேசுனு வந்தா யார் பொறுப்பாகிறது"
"கண்டிப்பா நீங்க இல்லே அங்கிள் பயப்படாதிங்க" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் பாhத்திபன் செல்போன் ஒலித்தது. செல்போனை எடுத்தான் பார்த்திபன் "ஹலோ" எதிர்தரப்பில் "சார் நீங்க எங்கே இருக்கிறீங்க? மீனாட்சி சுந்தரம் சார் அட்மிட் பண்ணின ஆஸ்பத்திரி ரிசப்சனில் நான் இருக்கேன்" "சார் ஒரு நிமிஷம் நான் அங்கே வரேன்" என்று சொல்லி பார்த்திபன் பட்டாபிசாருடன் ரிசப்சனுக்கு சென்றான். அங்கு ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு நபரும் அவர் அருகே ஒரு முப்பத்தைந்து, நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞனும் பதற்றத்தோடு நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் உடையிலிருந்து நேரடியாக அவர்கள் ஆபீசிலிருந்து வந்துயிருகிறார்கள் என்பது தெளிவானது. அந்த இளைஞனின் முகத்தில் பதட்டமும் பயமும் குடிக் கொண்டிருந்தது. அவர்களை நெருங்கிய பார்த்திபன் "ஹலோ சார் நா தான் பார்த்திபன். நா தான் உங்களுக்கு போன் பண்ணினேன். மீனாட்சி சுந்தரம் சார் இப்போ கிரிட்டிக்கல ஸ்டேஜ்ஜை தாண்டி ஐசியூவில் இருக்காருனு இப்போதான் நர்சு சொன்னங்க. இதை கேட்ட அந்த இளைஞன் "அய்யய்யோ அப்பாவுக்கு என்னாச்சு புரோ என்ன நடந்திச்சு" என்று பதட்டத்தோடு கேட்டான், பார்த்திபனும் நடந்தது முழுவதையும் அவருக்கு எடுத்து சொன்னான். அப்போது அந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க நபர் பேச துவங்கினார். "தம்பி இவரு எங்க கம்பெனியுடைய மேனஜிங் டைரக்டர். நா அவருக்கு செகரட்டரியா இருவது வருஷமா ஒர்க் பண்ணிட்டு இருக்கேன். இவரு அவருடைய பையன் பேர் அருண். இந்த கம்பெனியிலே எக்ஸ்ஸிகுட்டாவா இருக்காரு. சார் இன்னைக்கு பேக்டரி விசிட் போறேன்னு மணலிக்கு கிளம்பினார், டிரைவர் லீவானதுனாலே அவரே ஓட்டிட்டு வந்தாரு. அதுக்கு இடையிலேதான் இந்த மாதிரி எல்லாம் நடந்திருக்கு. நீங்க செஞ்ச இந்த ஹெல்ப்புக்கு என்ன சொல்றதனே தெரியலே கடவுள் உங்களை நல்லா வைக்கட்டும்" என்றார்.

உடனே பக்த்திலிருந்த பட்டாபிசார் "எங்கே நல்லா வக்கறது. நேரமும் போயி போக வேண்டிய இண்டர்வியூக்கும் போகாமே இங்கே வந்து இருந்தா" என்றார்.

(தொடரும்...)

*வாழ்க வையகம்*

அன்புடன்

மனோகர்

குவைத்

*****

# பலன் தரும் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

அனைவருக்கும் நமஸ்காரம்,

உலகில் உள்ள அனைத்து மக்களும் உயிர் வாழ உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும், தேவை. மனிதர்கள் யார் இறந்துவிட்டாலும் உடனே, "பேச்சு, மூச்சு நின்று விட்டதா?" என்கிறார்கள். மூச்சு என்பதை நாம் உணரமுடியும், ஆனால் பேச்சுதான் மனிதர்களை எல்லாருடனும் இணைக்கின்றது பேச இயலாதவர்கள் எவ்வளவு சைகையின் மூலமாக தெரிவித்தாலும் மற்றவர்களுக்கு சரியாக புரிவதில்லை. எனவே மனிதர்களுக்கு பேச்சு மிகவும் முக்கியம். ஒருவருக்கு கண்பார்வை சரியாக தெரியவில்லை என்றால் அதற்கு தகுந்தாற்போல கண்ணாடி உபயோகித்து எழுத்துக்களைப் படிக்கலாம். காது சரியாக கேட்கவில்லை என்றால் அதற்கும் ஒரு கருவியை பொறுத்தி மற்றவர்கள் சொல்வதைக் கேட்கலாம். ஆனால் பேச முடியாதாவர்களுக்கு எந்தவித மாற்று செய்கையையும் செய்ய இயலாது. இன்று பலருக்கு பேச்சு வராமல் துன்பப்படுகிறார்கள். எனவே பேச்சு வருவதற்கு பலன்தரும் பதிகங்களிலுள்ள ஊமை, திக்குவாய் இவற்றைப் போக்கும் பதிகத்தை பக்தியுடனும், நம்பிக்கையுடனும் பாராயணம் செய்து பலனைப் பெறலாம், இப்பதிகத்தைப் பற்றி இறைவனின் பாதக் கமலங்களை வேண்டி இத்தொடரில் எழுதுகின்றேன்.




இடம்: ஸ்ரீ அக்னீஸ்வரர் ஆலயம், களக்காட்டூர், காஞ்சிபுரம்

## *பதிகம் - 6*

## *ஊமை,திக்குவாய் இவற்றை போக்கும் பதிகம்*

பண்டையக் காலம் முதல் குழந்தைகளையே தெய்வமாக எண்ணினர். அதனால்தான் குழந்தைகளை பிள்ளைச் செல்வமே, பேசும் தெய்வம் என்றனர். ஒரு தாயானவள் தன் உயிரையே பணயமாக வைத்து வலி வேதனைகளோடு குழந்தையை ஈன்று எடுக்கிறாள். குழந்தையின் அழுகுரல் கேட்டவுடன் வலி வேதனைகளை மறந்து கண்கள் குழந்தையை தேடுகின்றன. காதுகள் குழந்தையின் அழுகுரலை கேட்கின்றது. கைகளோ குழந்தையை அள்ளி அணைக்க துடிக்கின்றது. இதற்கெல்லாம் மூல காரணம் குழந்தையின் குரல்.

பேச்சு தான் மிகவும் முக்கியம.; பிச்சைகாரன் கூட "அம்மா தாயே பிச்சை போடுங்கள்" என்று குரல் கொடுத்தால்தான் அவனுக்கு உணவு கிடைக்கின்றது. அதனால்தான் "வாயுள்ள பிள்ளை பிழைத்துக் கொள்ளும"; என்றனர்.
மேலும் "ஊமைப் பெண் ஒரு கனவு கண்டாள் அதை உள்ளத்தில் வைத்தே வாடுகின்றாள்" என்பதை கேட்க மிகவும் வேதனையாக உள்ளது.

### பதிக வரலாறு

திருஞான சம்பந்தர் திருக்கோலக்காவிற்கு வழிபட சென்றார், அங்கு இப்பதிகத்தை கைகளால் தாளமிட்டபடி பாடினார். அப்போது இறைவர் பொன்னால் ஆகிய தாளத்தை அளித்தார். பொன் தாளத்தில் ஓசை வருவது கடினம். அத்தலத்தில் இறைவி பொன்தாளத்திற்கு ஓசைக் கொடுத்தார். அதனால்தான் இத்தலத்து இறைவி "ஓசைக் கொடுத்த நாயகி" என்று அழைக்கப்படுகிறார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு வசதியான குடும்பம.; அவர்களுடைய மகனுக்கு பன்னிரண்டு வயதாகியும் பேச்சு வரவில்லை. எல்லா மருத்துவச் சிகிச்சையும் செய்து பார்த்து பலன் இல்லை. பெற்றோர்கள் இப்பதிகத்தை நம்பிக்கையுடன் தினமும் பாராயணம் செய்தனர். திடீரென்று ஒரு நாள் காலையில் ஊமையாய் இருந்த பையன் " அம்மா" என்று அழைத்தான். அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கோலக்கா இறைவருக்கு பூசைகள் செய்து வழிபட்டு மேலும் ஆளறு சவரனில் பொன்னால் ஆன தாளம் செய்து ஆலயத்திற்கு அளித்தனர். இன்னும் இத்தலத்து அர்ச்சகர் அத்தாளத்தை அனைவரிடமும் காட்டுகின்றார்.

**கோலக்கா** **பண்: தக்கராகம்**

முடையில்; வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்கா உளான்
சடையும் பிறையும் சாம்பல்பூச்சும் கீழ்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ

பெண்தான் பாகம் ஆகப் பிறைச் சென்னி
கொண்டான் கோலக்காவு கோயிலாக்
கண்டான் பாதம் கையால் கூப்பவே
உண்டான நஞ்சை உலகம் உய்யவே

பூண்நல் பொறிகொள் அரவம் புன்சடை
கோணல் பிறையன் குழகன் கோலக்கா

மாணப் பாடி மறை வல்லானையே
பேணப் பறையும் பிணிகள் ஆனவே

தழுக் கொள் பாவம் தளர வேண்டுவீர்
மழுக் கொள் செல்வன் மறிசோ அம்கையான்
குழுக் கொள் பூதப்படையான் கோலக்கா
இழுக்கா வண்ணம் ஏத்தி வாழ்மினே

மயில் ஆர் சாயல் மாது ஒர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தைதன்
குயில் ஆர் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே

வெடி கொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடி கொள் விழவு ஆர் கோலக்காவுள்எம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே

நிழல் ஆர்சோலை நீல வண்டு இனம்
குழல் ஆர்பண்செய் கோலக்கா உளான்
கழலால் மொய்த்த பாதம் கைகளால்
தொழலார் பக்கல் துயரம் இல்லையே.

எறிஆர் கடல் சூழ் இலங்கைக் கோன்தனை
முறிஆர் தடக்கை அடர்ந்த மூhத்திதன்
குறிஆர் பண்செய் கோலக் காவையே
நெறியால் தொழுவார் வினைகள் நீங்குமே

நாற்றமலர் மேல் அயனும் நாகத்தில்
ஆற்றல் அணைமேலவனும் காண்கிலாக்
கூற்றம் உதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாதம் ஏத்தி வாழ்மினே

பெற்ற மாசு பிறக்கும் சமணரும்
உற்ற துவர் தோய் உருஇலாளரும்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே

நலம்கொள் காழி ஞான சம்பந்தன்
குலம் கொள் கோலக்கா உளானையே
வலம்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலம் கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே

திருச்சிற்றம்பலம்.

**வாழ்க்கை அனுபவம்**

இப்பதிகத்தை நம்பிக்கையுடன் மனமுருகி பாராயணம் செய்தவர்கள் பலன் பெற்றுள்ளதற்கு பல சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்றை எழுதுகின்றேன். ஓர் அழகான மலைக்கிராமம். எங்கு நோக்கியும் பசுமையாக இருக்கும். அங்கு நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த ஓர் குடும்பம். அவர்களுக்கு ஈஸ்வரன் என்ற ஓர் மகன் இருந்தான். அங்கு தேயிலை தோட்டத்தில் சூப்பர்வைசராக வேலை பார்த்து வந்தான். தோட்டத்தில் தினக்கூலியாக ஆண்களும், பெண்களும் வேலை செய்து வந்தார்கள். ஈஸ்வரனுக்கு மீனாட்சி என்ற பெண்ணை திருமணம் செய்து வைத்தார்கள். அவர்களுக்கு வேலன் என்ற அழகான மகன் பிறந்தான். வேலனுக்கு மூன்று வயதாகியும் பேச்சு வரவில்லை ஈஸ்வரனும் பக்கத்து ஊருக்கு சென்று மருத்துவரிடம் காண்பித்தான். ஆனால் பலன் ஒன்றும் இல்லை ஈஸ்வரனும், மீனாட்சியும் மிகுந்த வேதனையுடன் இருந்தார்கள்.

அப்போது தொழிலாளி ஒருவரின் வீட்டில் அவருடைய மகளுக்கு வளைகாப்பு நடந்தது. அவர்கள் மிகவும் வற்புறுத்தி அழைக்கவே ஈஸ்வரன் மீனாட்சியையும். வேலனையும் அழைத்துச் சென்றார். அங்கு வேலனைப் பார்த்து எல்லோரும் வருத்தப்பட்டனர். அப்போது ஊரிலிருந்து வந்த மூதாட்டி ஒருவர் விபரத்தை கேள்விப்பட்டு மீனாட்சியை அழைத்து இப்பதிகத்தைக் கொடுத்து மனமுருகி பாராயணம் செய்ய சொன்னாள். அவர்களும் தினமும் இறைவனை வேண்டி இப்பதிகத்தைப் படித்தனர்.

திருவாதிரை திருநாள் வந்தது. மீனாட்சி வீட்டில் இறைவனுக்கு படைக்க களியும்,ரெட்டியும்,கூட்டும் செய்திருந்தனர். பக்கத்து வீட்டிற்கு ஊரிலிருந்து வந்த ஒரு மூதாட்டியை சாமி கும்பிட அழைத்தனர். அவர் பெயர் பார்வதி. அவர் வேலனைப் பார்த்தார் வேலனோ ஆவலுடன் களியையும்,ரொட்டியையும் பாhத்;தான். பூசை நன்கு முடிந்தது.

பார்வதி வேலனைப் பார்த்து “வேலா அப்பனே” என்று கூப்பிட்டால்தான் உனக்கு களியும்,ரொட்டியும் கொடுப்போம்” என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். வேலனோ அழுதான.; எல்லோரும் கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வேலனோ இறைவனைப் பார்த்து அழுதான். மீனாட்சி கண்ணீர் மல்க இறைவனை வேண்டினாள். திடீரென்று வேலன் “அப்பா” என்று உரக்கக் கூவினான். எல்லோரும் வாயடைத்து நின்றார்கள். வேலன் “அப்பா அப்பா” என்று கூறி கொண்டே அழுதான். மீனாட்சி இறைவனை வணங்கி பிறகு பார்வதியின் காலில் விழுந்து வணங்கினாள். பார்வதி இறைவனுக்கு நன்றி கூறி வேலனை கட்டி அணைத்து களியையும், ரொட்டியையும் கொடுத்தார். பதிகத்தின் மகிமையால் வேலன் பேசினான். பிறகு வேலன் நன்கு படித்து நல்ல பதவியில் உள்ளான். இதிலிருந்து இப்பதிகத்தின் மகிமையையும். இறைவன் பார்வதியின் மூலம் வேலனுக்கு அருள் புரிந்ததையும் அறியலாம்.

அன்பர்களே! இந்த பதிகத்தின் மகிமையை என்னென்று செல்வது, இன்னும் மற்றொரு பதிகத்தில் மீண்டும் சந்திப்போம்.

அனைவருக்கும் நன்றி

திருச்சிற்றம்பலம்

அன்புடன்

கலாவதி, ஊட்டி

*****

# தனது குருவைப்பற்றி

(ஸ்ரீ பாலப் பெரியவா)

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும், ஏதாவது ஒரு நாள், என்றென்றும் மறக்க முடியாததாகவும், அவர்களின் வாழ்க்கையில், ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய நாளாகவும் அமையும். அந்த வகையில் எனது வாழ்க்கையில் 29/05/1983, ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய நாள். எனது வாழ்க்கையில் ஒரு மறக்க முடியாத மிகச் சிறந்த நாள். (RED LETTER DAY)

ஆம்! அன்றுதான் என் துறவற வாழ்க்கை தொடங்கியது. என் குருநாதர், "ஜெகத் குரு பூஜ்யஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் திருக்கரங்களினால், காவி ஆடையையும், ஞானக்கோலான தண்டமும் பெற்றேன். அவர் என்னை தன்னோடு அனைத்துக் கொண்டு, தாய் பறவை, தன் குஞ்சினை தன் இறக்கினால் மறைத்து வைத்துப் பாதுகாப்பது போல, காத்து வருகிறார். இது எனது மிகப் பெரிய பாக்யம். அந்த நாளில் இருந்து இன்றுவரை, நினைவு படுத்திப் பார்க்கையில், என் குருநாதர், " இரும்பைக் காந்தம் கவர்ந்து இழுத்து தன்னோடு இணைத்துக் கொள்வது போல, என்னையும் தன்னோடு இணைத்துக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும்.

எனது குருநாதரின் அருகிலேயே இருந்து, அவரை, அவரின் ஒவ்வொரு செயலையும் கூர்ந்து கவனித்ததில் அறிந்து கொண்டேன், அவர் "எத்தனை மகோன்னதமானவர் என்று!" அதனை விவரிக்க எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. எவ்வளவு தேடினாலும் நான் தோற்றுப் போகிறேன். என் குருநாதரைப் பற்றி என் பரமகுரு (ஸ்ரீ மஹாபெரியவா) சொன்னது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது. "அவர் ஸ்ரீ மடத்துக்கு செய்தது மாதிரி வேறு யாரும் இனி செய்ய முடியாது".

என் குருநாதர் பன்முகத்தன்மை கொண்ட பெரும் ஆளுமை கொண்டவர். ஸ்ரீ வல்லபாச்சாரியார் என்ற மஹான், ஸ்ரீ க்ரிஷ்ணரைப் பற்றி செய்த ஒரு சுலோகம் இருக்கிறது, ஸ்ரீ கிருஷ்ணரின் உடலில் எந்த பாகம் மதுரமானது (இனிமையானது) என்று சொல்ல முடியும்? அவரின் திருவுருவம் மொத்தமுமே மதுரமானது தானே? இதில் எதை சொல்வது? எதை விடுவது? (ஆதாரம் மதுரம் மதுராதிப்பதே ரஹிலம் மதுரம்) அதைப்போலவே என் குருநாதர், எல்லாவகை நல்ல குணங்களின் மொத்த வடிவாய் இருக்கும்போது எதை சொல்வது எதை விடுவது? இருப்பினும் எனது குருநாதரை, "லோக குரு" என்று உலகமே போற்றத்தக்க அளவில் உள்ள சிலவற்றை பட்டியலிட முயல்கிறேன்.

சுமார் 2510 வருடங்களுக்கு முன்பு, ஸ்ரீ பகவத் பாதாள் ஆதி சங்கரரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பீடாதிபதி என்ற மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த என் குரு நாதர் "காட்சிக்கு" (பார்ப்பதற்கு) மிக எளிமையான கோலம்; எப்போதும் சிரித்த முகம், யார் வேண்டுமானாலும் அவரை எளிதாக அணுகி பேச முடியும். (சௌலப்யம்) தன்னை நாடி வரும் பக்தர்களின் மனக் குறைகளை பரிவோடு கேட்டு, அதிலிருந்து மீள்வதற்கான அறிவுரைகளையும், ஒரு சில எளிய பரிகார முறைகளும் கூறி, அவர்களை ஆசிர்வதித்து அருள்வார். தனக்கு ஏற்படும் அசௌர்யங்களையும் பொருட்படுத்தாமல் எல்லோருக்கும்

தரிசனம் அளிப்பார். தன்னைக் காண வரும் எவரும் ஏமாற்றத்தோடு திரும்பக் கூடாது என்பதில் அவர் மிக்க கவனமாக இருப்பார். தன்னை பற்றிக்கொள்ளும் எவரையும் நழுவ விடாமல் காப்பாற்றுவதால்தான் இறைவனுக்கு "அச்சுதன்" என்றும் பெயர் உண்டு. அது இவருக்கும் பொருந்தும். நாடாளும் அரசன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு பாடல் உண்டு. அது காட்சிக்கு எளியன். கடுஞ்சொல்லன் அல்லன் என தொடங்கும். இவர் ஆன்மீக உலகின் ராஜா அல்லவா அது இவருக்கும் பொருந்துகிறது தானே?

இவர் ஒரு நடமாடும் 'கலைக்களஞ்சியம்' இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து விஷயங்கள் பற்றியும் அறிந்தவர். நல்ல விஷயங்கள் எந்த இடத்தில் இருந்து வந்தாலும், அதனை ஏற்றுக்கொண்டு பாராட்டுவதோடு அதற்கான வெகுமதிகளையும் செய்யத் தவற மாட்டார். இவரின் மேலாண்மைத் திறன், அந்த அறிவு, தற்காலத்தில் மேலாண்மை படிப்பு (Management Studies) படிக்கின்ற மாணவர்களுக்கு, பாட புஸ்தகமாக வைக்கும் அளவிற்கு சிறப்பானது. இவரின் நுட்பமாக திட்டமிடும் பாங்கும், அதை சிறப்பாக செயல் படுத்தும் திறமையும், எல்லோரும், கற்றுக்கொள்ள வேண்டிய பாடம். எதையும் உடனடியாக முடிவெடுத்து, அதனை ஒத்திப் போடாமல், உடனே செயல் படுத்தும் நேர்த்தியும் நம் எல்லோராலும் பின்பற்றப் படவேண்டியது ஆகும். கவனம் இன்மை; ஒருவகையான சுறுசுறுப்பு இல்லாமல் இருத்தல் என்பது இவரது அகராதியில் இல்லாதது. எப்போதுமே ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்கு, ஒரு சரியான நபரைத் தேர்ந்தெடுத்து, அதனை சரியான முறையில் செய்விப்பது இவருக்கு கைவந்த கலை.

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அதன்கண் விடல் "**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு உதாரணமாய் திகழ்ந்தார். இவரின் பொறுமையும், சகிப்புத் தன்மையும் ஓர் எல்லைக்குள் அடங்காதது.

"வேதத்தை தினமும் ஓது " என்றார் ஆதி சங்கரர். அதையேதான் ஔவையும் சொன்னார். "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்று. வேதம், அதனைக் கற்கும் வித்யார்த்திகள் (மாணவர்கள்) இவர்கள் மீது இவர் காட்டிய பிரியமும், பாசமும் அலாதியானது. வேத பாடசாலை குழந்தைகளைக் காணும் போதெல்லாம், அவர்களை அன்போடு அழைத்து, அவர்களின் கல்வி பற்றியும், அவர்களுக்கு கிடைக்கும் வசதிகள் பற்றியும் கேட்டறிந்து, இன்னும் அவர்களுக்கு என்னென்ன தேவை என்பதைக் கேட்டு அவற்றை உடனுக்கு உடன் நிறைவேற்றி தந்ததால், அந்த வியார்திக் குழந்தைகளும் உற்சாகம் அடைந்து மேலும் அதிக ஆர்வத்துடன் வேத பாடங்களைக் கற்றனர். வேதமோதிய வித்வான்களுக்கும் அவரவர்கள் தகுதிக்கு தக்கபடி பரிசுகளும், சன்மானங்களும் அளித்து அவர்களையும் ஊக்குவித்து, மேற்கொண்டு "வேத பாஷ்யம்" பாடங்களை படியுங்கள் என்று கூறினார். இதனால் வேதபாஷ்யம் என்ற சற்று கடினமான பாடம் மீண்டும் வளர்ச்சி அடைந்து அதன் தற்காலிக சரிவில் இருந்து மீண்டது.

ஆதி சங்கர பகவத் பாதாள், எப்படி ஒத்தக் கருத்துடையோரை எல்லாம் ஒருங்கிணைத்து, **"ஷண்மத ஸ்தாபனம்"** செய்தாரோ அது போல குருநாதரும், பல்வேறு மக்களையும் ஒருங்கிணைத்து, " வேற்றுமையிலும் ஒற்றுமையை உருவாக்கி, மனித நேயத்தை வளர்க்கச் செய்தார். அதற்கு ஓர் உந்து சக்தியாய், மையமாக இருந்து வழி நடத்தினார்.

ஆதி சங்கரருக்குப் பிறகு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அனைவரிலும் இவர் ஒருவரே, கைலாய மலை வரை சென்று, அங்கே, மலை அடிவாரத்தில், ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாளுக்கு திருவுருவ சிலை ஒன்றை நிறுவினார்.

51-சக்தி பீடங்கள், 7-மோக்ஷ புரிகள், 12-ஜோதிர்லிங்க க்ஷேத்திரங்கள், இவைகளை எல்லாம் தரிசனம் செய்து கொண்டதோடு, பிரதான 7-புண்ய நதிகளிலும், இன்ன பிற பவித்திரமான நதிகளிலும் ஸ்நானம் செய்த புண்ணியம் பெற்றவர்.

இவரின் "குரு பக்தி" அனைவரும் அறிந்ததே, மிகப் பிரசித்தம். குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி (ஸ்ரீ மஹாபெரியவா) தமது காலத்தில் என்னென்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ, அவை எல்லாவற்றையும் தவறாது செய்து முடித்தவர் எனது குருநாதர். சூழ்நிலைகளை அலசி, ஆராய்வது, ஒருவரைப் பற்றி இவரது கணிப்பு, எடைபோடும் தன்மை என்றுமே தோற்றது இல்லை.

இவரின் நடத்தை முறை அனைவரும் பின்பற்ற வேண்டிய பாடம். அனைவருமே பின்பற்ற வேண்டிய சகல கல்யாண குணங்களும் நிறைத்த ஓர் ஆதர்ஷ புருஷர். மாற்று மதத்தினரும் இவர்மேல் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் இதற்கு ஓர் சான்றாகும்.

நமது வேத நெறி மார்க்கம், பண்பாடு, கலை, கலாச்சாரம் இவற்றில் இவருக்கு இருந்த நம்பிக்கை, ஈடுபாடு இவரிடம் ஆழமாகவே வேரூன்றி இருந்தது. அதே வேளையில் தற்கால விஞ்ஞான தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, நம் பழமையை மேலும் பிரச்சாரம் செய்து ப்ரகாசமாக்கப் பயன்படுத்திக் கொண்டார். இதனால் பழமையும், புதுமையும் இணைய ஓர் இணைப்புப் பாலமாக இருந்தார் என்றால் அது மிகையல்ல.

பொது மேடைகளிலும், பத்திரிகையாளர்களுக்கு இவர் பேட்டி அளித்தபோது, இவர் கையாண்ட சாதுர்யம், சொல்வன்மை, எந்த சூழ்நிலையிலும் வழுவாது தனது கருத்துக்களை உறுதியோடு எடுத்துரைத்த பாங்கு அனைவரையும் கவர்ந்ததோடு அன்றி உலக அளவில் இவர் புகழை கொண்டு சென்றது.

இறுதியாக, ஆனால் முடிவாக அல்ல; எமது குருநாதரின் சமூக பார்வை மிகவும் தொலை நோக்கானது. இந்து மதம் என்பது ஒவ்வொரு தனி மனிதன் வாழ்விலும் பின்னிப் பிணைந்தது. ஒவ்வொரு மனிதனும், ஆன்மீக வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி பின் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என ஓங்கி ஒலிக்கிறது. வாழ்க்கையின் பயனே அதுதான், "இந்தப் பிறப்பு எடுத்ததே, இனி பிறப்பே எடுக்கக் கூடாது" என்பதற்காகத்தான். இந்த

உன்னதமான லட்சியத்தை ஒவ்வொருவர் வீட்டு வாயிற்படியருகே கொண்டு சென்றவர் நமது குருநாதர். அதற்காகத்தான் "ஜன கல்யாண், ஜன ஜாக்ரன்" என்ற அமைப்புகளை உருவாக்கி அதற்காக உழைத்தார். "மக்கள் சேவையே, மகேசன் சேவை" என்ற முழக்கத்தோடு, தாம் செயலாற்றியதோடு, பிறரையும் இதில் ஈடுபடுத்தி, தன்னோடு இணைத்துக் கொண்டு உழைத்து அதில் வெற்றியும் பெற்றார்.

இவரின் பார்வை அருள்நோக்கானது ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளோ, குறிப்பிட்ட ஒரு பகுதிக்குள்ளோ அடங்காது. உலகம் முழுமைக்கும் பொதுவாகவும். நம் பாரத தேசத்திற்கு சிறப்பாகவும் என்று செயலாற்றியதோடு தேசத்தின் ஒற்றுமை, உறுதிப்பாடு, வலிமை, வளமை, ஸ்திரத்தன்மை ஆகியவற்றோடு என்றென்றும், நம் தேசம் திகழவேண்டும் என்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர் நம் குருநாதர்.

*****

# தினமலர் (1) முதல் தரிசனம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி 70-ஆவது பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யார்
ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், முதன் முதலாக மஹாபெரியவர்களையும்
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளையும் தரிசனம் செய்த அருளமுதான

அனுபவத்தை விவரிக்கும் கட்டுரை இது.

மகாராஷ்டிரா மாநிலம் சதாராவில், முகாம் இருக்கும்போதுதான், ஸ்ரீ மஹா பெரியவர்களையும், ஸ்ரீ புதுப் பெரியவர்களையும் நான் முதன்முதலில் தரிசனம் செய்து கொண்டேன்.

ஒருநாள் சாயங்காலம் (மாலை நேரம்) தீப நமஸ்காரம் நடந்தது. அப்போது யானை பாதுகைக்கு சாமரம் வீசியது. அங்கே யானை நின்றிருந்த இடம் சற்று சரிவாக இருந்ததால், அதன் பின் கால்கள் கொஞ்சம் வழுக்கிய போது, யானை பெரிசாகக் கத்தியது. (பிளிறியது) அப்பப்பா! எல்லோருக்கும் ஒரே கிலி (பயம்). நான் நடுங்கிப் போய் விட்டேன்.

மற்றொரு நாள், மகா பெரியவர்கள் ஒரு மூலையில் உட்கார்ந்து இருந்தார்கள். புதுப் பெரியவர்கள் நடுவில் அமர்ந்து, உபன்யாசம் (அருளுரை) செய்து கொண்டு இருந்தார்கள். திடீரென்று அவர்கள் உபன்யாசத்தை நிறுத்தி விட்டு உள்ளே சென்று விட்டார்கள். ஏனென்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சில நிமிஷங்கள் கழித்து, மகாபெரியவர் உத்தரவின் பேரில்தான் புதுப் பெரியவர் அவர்கள் அப்படிச் சென்றார்கள் என்று ஒருவர் தெரிவித்த போது தான், எனக்குக் காரணம் தெரிந்தது, அது ஆச்சர்யமாகவும் இருந்தது.

பெரியவர்கள், ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜை செய்யும்போது நான் அருகிலிருந்து கவனித்து வருவது வழக்கம். ஒரு பையன் சுவாமி நைவேத்யத்திற்கு தேங்காய் உடைத்து வைப்பது; விளக்குக்கு நெய் விடுவது போன்ற கைங்கர்யங்கள் செய்து வருவான். இதுபோல் அவன் என்னென்ன செய்கிறான் என்பதை எல்லாம் கூர்ந்து கவனிப்பேன்.

பிறகு, ஒரு சந்தர்ப்பம். நான் மகா பெரியவர்களை குல்பர்கா என்னும் ஊரில் தரிசனம் செய்து கொண்டேன். அவர்கள் அந்த வயதான காலத்திலும் எவ்வளவு வேகமாக நடக்கிறார்கள் என்பதைப் பார்க்க எனக்கு ஆச்சர்யமாக இருக்கும். குல்பர்காவில் இருந்து பிரம்மபுரி, பனப்புரி என்ற இடத்துக்கு நான் குதிரை வண்டியில் சென்றேன். அங்கே இருந்த கோயிலில் பாடாலேஸ்வரர் என்ற சிவலிங்கம் இருந்தது. அங்கே பூஜையின் போது இரண்டு நாட்களுக்கு, ரிக்வேத பாராயணம் செய்யச் சொன்னார்கள், செய்தேன். அப்படியே தோடகாஷ்டமும் சொல்லச் சொன்னதால் அதையும் சொன்னேன். ஒருநாள் சில பக்தர்கள் வந்து, வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயத் திருப்பணி, கும்பாபிஷேகம் பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போதெல்லாம் பெரியவர்கள், தண்ட தர்ப்பணம், அனுஷ்டானம் செய்யும் போது கூர்ந்து கவனிப்பது என் வழக்கம். அவர்கள் அப்போது ஏதோ மந்திரம் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். சிலசமயம் அவர்கள் ஒரு மணி நேரம், கண்ணை மூடி ஜெபம் செய்வதைப் பார்க்கும் போது, எனக்கு வினோதமாக இருக்கும்.

ஒருநாள் வயதான ஒருவர் என் அருகில் வந்து பெரியவர்கள் உத்தரவிடுவதாகக் (கூப்பிடுவதாக) சொன்னார்கள். அவர்கள் ஒரு பர்லாங் தூரத்தில் தங்கி இருந்தார்கள். நான் அவர்களிடம் சென்றேன்.

ஒரு புத்தகத்தை என்னிடம் கொடுத்து, தைத்ரீய மந்திர கோஷம்தான் அது. பெரியவர்கள் என்னை அருகில் உட்காரச் சொன்னார்கள். பிறகு அந்தப் புத்தகத்தில் இருந்த சில பக்கங்களை புரட்டச் சொன்னார்கள். பிறகு அதில் இடது புறம் இருந்த ஒரு பக்கத்தில் அமைந்த கடைசி ஐந்து வரிகளை படிக்கச் சொன்னார்கள். பிறகு, "ஸ்ரீயேஜாதம் என்று ஆரம்பித்து, "ய ஏவம் வேத" என்று முடியும் மந்திரத்தை ஐந்து தடவை சொல்லும்படி உத்தரவிட்டார்கள். அதன்படியே செய்தேன். அதன் பிறகு அந்த மந்திரம் அந்த புஸ்தகத்தில் எங்கே இருக்கிறது என்பதை எடுக்கச் சொன்னார்கள். எடுத்துக் காண்பித்தேன். அப்போது ரிக்வேத ஐதரேய ப்ராம்மணம் என்ற புஸ்தகத்தை எடுத்து வரும்படி மற்றவரிடம் சொன்னார்கள். அது கிடைக்கவில்லை. அப்போதுதான், "வித்யாரண்யர் பாஷ்யம்" படித்தது என் நினைவிற்கு இருக்கிறது. தண்டலம் கிராமத்தில் ஒருவர் தெலுங்கில் அச்சிட்ட புஸ்தகம் வைத்து இருந்தார். அவகாசம்(நேரம்) கிடைத்த போது எல்லாம் நான் அவரிடம் கற்றுக்கொண்டேன் என்றேன்.

சில நிமிஷம் மௌனம் நிலவியது. பிறகு அவர்கள் கேட்டார்கள். அந்த மந்திரத்தில் எந்தப் பாடம் சரியானது? வஷட் க்ருத்யம் சந்தத்யை என்பதா? அல்லது வஷட் க்ருத்யை சந்தத்யை என்பதா? இரண்டாவதாக சொன்ன பாடம் சரியானது என்று நான் தெரிவித்தேன்.

பிறகு அவர்கள் உபதேசம் போல என்னிடம் சொன்னார்கள் 'தத்வஸாரம் (வேதாந்த நூல்) படி. அதோடு கூட தெலுங்கு எழுதப்படிக்க நன்றாக தெரிந்து கொள்.' ஒருநாள் பெரியவர்கள் ஸ்ரீபாடலீஸ்வர் கோவிலில் குறுகலான ஓரிடத்தில் அமர்ந்திருந்தார்கள். அங்கே எதிரில் பதிமூன்று வேத வித்யார்த்திகள் (மாணவர்கள்) ரிக்வேத பரீக்ஷை கொடுக்க உட்கார்ந்து இருந்தார்கள். என்னையும் வரும்படி அவர்கள் கட்டளையிடவே நானும் சென்றேன். என்னிடம் ஒரு புஸ்தகத்தை எடுத்துக் கொடுத்து அந்த புஸ்தகத்தை கடைசி அட்டைப் பக்கத்தில் ஏதோ ஒரு மந்திரத்தை எழுதிட உத்தரவு செய்தார்கள். எந்த மந்திரத்தை எழுதுவது? என்று புரியாமல் நான் குழப்பத்தில் நின்றிருந்தேன்.

அடிக்கடி பெரியவர்கள் தீபாராதனை மந்திரத்தைச் சொல்லும்படி சொல்வார்கள். திரும்பத் திரும்பப் பலதடவை அதை சொல்லக் சொல்வார்கள். நான் சொல்லும்போது என்னைக் கூர்ந்து கவனிப்பார்கள். பிறகு இதே போல இந்த மந்திரத்தைச் சொல்லு, எழுதிப்பார் என்பார்கள். புதுப் பெரியவர்களும் என்னைப் பற்றி ஏதும் சொன்னதாக தெரியவில்லை. சந்யாச ஆஸ்ரமம் எனக்கு கொடுப்பது என்று தீர்மானம் ஆன பிறகுதான் பெரியவர்கள் இப்படி எல்லாம் சொன்னதன் பொருள் எனக்கு விளங்கிற்று.

ஒருநாள் 1983-ஆம் ஆண்டு மே மாதம் பெரியவர்கள் சன்னதிக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். அவர்கள் மகபூப் நகர் பருத்தி ஆலையில் (காட்டன் மில்) தங்கியிருந்தார்கள். நான் சந்நியாச ஆசிரமம் ஏற்கப்போகும் நாள் மிக நெருக்கத்திலேயே இருந்தது. நான் அங்கே வந்திருப்பதன் நோக்கத்தை அறிந்த சிலர் என்னை மிகுந்த பக்தி சிரத்தையுடன் மரியாதையுடன் என்னை பெரியவர்களிடம் அழைத்துச் சென்றார்கள்.

அந்தச் சமயம் பெரியவர்கள் தம்மை சுற்றி இருந்தவர்களிடம் போலகம் சுந்தர சாஸ்திரிகள் பற்றியும் அவர் தர்ம சாஸ்திரத்தில் இணையற்ற வித்வான் என்றும் அவ்வளவு பெரிய வித்வான்களை இன்றைக்கு விரல் விட்டு எண்ணி விடலாம் என்றும் பேசிக்கொண்டு இருந்தார்கள். நான் அவர்களின் தரிசனத்திற்காக அங்கே வந்திருப்பதைப் பற்றி சந்தோஷப் பட்டார்கள்.

நான் அங்கிருந்து ஹைதராபாத் சென்று, அங்கிருந்து கட்டாயம் திருப்பதி செல்ல வேண்டும் என்று தெரிந்தது. எனவே, அவர்களுடைய கடாக்ஷத்தினாலேயே, அவர்களின் அருள் கிடைத்து விட்டது என்ற எண்ணத்தில் நான் அங்கே அவர்களையே சந்நிதியின் முன்னால் தரிசித்தபடி நின்றிருந்தேன். ஆச்சாரியார் அவர்களும் என்னையே நோக்கி கடாக்ஷித்தரர்கள். அதன்பிறகு நான் அங்கிருந்து கிளம்பி விட்டேன்.

அப்போது பெரியவர்கள் ஒரு பக்தரிடம் அவர் மூன்று ஆச்சாரியார்களை ஒரே சமயத்தில் பார்ப்பார் என்று சொன்னதாக நான் தெரிந்து கொண்டேன். நம் பெரியவர்கள் சத்தியத்தின் மூர்த்தியாக உண்மையே உருவெடுத்தாற்போன்று விளங்கினார்கள். மனித குலத்துக்கு நன்மை செய்வதையே தம் சங்கல்பமாக கொண்ட அவர்கள் தம்மை நிந்திப்பவனுக்கும் நன்மை செய்வதில் மிகுந்த சந்தோஷம் கொள்வார்கள். பெரும் வெள்ளத்தை தம்முள் அடக்கிக் கொள்ளும் பெரிய அணைக்கு ஒப்பானவர்கள் அவர்கள். சமுதாய நீதிக்கும் ஒற்றுமைக்கும் சதா பாடு படுபவர்கள். பிறர் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அதைத் தான் தாமும் செய்வார்கள். அவர்களுடைய அருள் எல்லோரையும் காப்பாற்றட்டும்.

*****

## பழமை போற்றிய பண்பாளர்

புதிய கோவில்கள் கட்டி கும்பாபிஷேகம் செய்வதை விட, ஆங்காங்கு இருக்கும் பழையக் கோயில்களை பராமரிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர் ஸ்ரீ ஜெயேந்திரர், கோயில்களை தொல்லியல் சின்னமாக ஆக்குதல் ஆகாது என்பது அவர் இதயத்தில் இருந்த எண்ணங்களுள் ஒன்று.

வழிபடு இல்லாமல் இருந்தது வேலூர் கோட்டையில் இருந்த ஜலகண்டேஸ்வரர் ஆலயம். இங்கு வழிபாடு நடக்க வேண்டும் என்று பக்தர்கள் கருதிய நேரத்தில் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர் ஸ்ரீ ஜெயேந்திரர். 1982-ல் ஜலகண்டேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம் கண்டது. 1984-பிப்ரவரியில் அங்கே அறுபத்து மூவர் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடக்க வழி கண்டார் பெரியவர்

*****

## ஸ்ரீ பாலப் பெரியவாளின் பாத யாத்திரை

**மஹாபெரியவாளின் ரிக்க்ஷா**

காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ பெரியவாள் செல்லும்போது உடன் செல்லும் ரிக்க்ஷா. காஞ்சி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் திருப்பதி செல்வதால் அவருடன் செல்ல ரிக்க்ஷா தயாராக நின்றுகொண்டு இருந்தது. அதன் உள்ளே வைக்கப்பட்ட பொருட்கள் பாலாஜி படம், ஜெப நேரத்தில் உபயோகம் படுத்தப்படும் தர்ப்பாசனம், பாதுகை, பழம், சுவர் கடிகாரம், பிரசாதப் பொருட்கள் இடையிடையே கொடுக்கப்பட்ட மாலைகள் யாவையும் ஸ்ரீ பாலாஜி படத்திற்கே அணிவிக்கப்பட்டன. முதலில் மஹா ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் ஜெப வழிபாடு முதலியவைகளை முடித்துக் கொண்டு பாலா பெரியவாள் புதுப் பெரியவாளிடம் குருவணக்கம் செய்து புதுப் பெரியவர்களுடன் யாத்ரா தானம் செய்யப் புறப்பட்டார்கள். உடன் வேத சாஸ்திர விற்பன்னர்கள், இராமாயண ப்ரவசன கர்த்தாக்கள், இளைஞர்கள் 38 பேர் கொண்ட குழுவிற்கு, புறப்பட்ட யாத்ராதானம் செய்விக்கப் பட்டது. 5-6-

1994 ஞாயிற்றுக் கிழமை மதியம் 2 மணிக்கு பிரதான வாயில் வழியாக புறப்பட்டு, காமாட்சி அம்மன் ஆலயத்திற்கு சென்று பூர்ண கும்ப மரியாதைகளை ஏற்றுக்கொண்டு அம்மனின் அபிஷேக வழிபாடு ஆராதனை செய்து கொல்ல சத்திரம் மேற்கு ராஜவீதி வழியாக பாண்டவர் பெருமாள் கோவில் சன்னதியைத் தரிசித்துக் கொண்டு ஏகாம்பரநாதர் சன்னதியை வந்தடைந்தார். ஈஸ்வரனுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற வேதகோஷங்கள் முழங்க பிரசாதங்கள் சமர்ப்பிக்கப் பட்டன. இருபுறமும் யானைகள் முன்செல்ல, வேதியர்கள் வேதகோஷங்கள் முழங்க காளங்கள், நாதஸ்வரம் முதலியவைகள் ஒலிக்க, பாத யாத்திரைக் குழு புறப்பட்டது. சர்வதீர்த்த குளக்கரையில் உடன் வந்த அன்பர்களுக்கு ஆசி வழங்கினார்கள். உடன்வந்த பல பிரமுகர்களை மடத்தில் இருந்து நடைபெறப்போகும் ஜெயந்தி விழாவிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் படியும் கூறி நகர எல்லயைத் தாண்டினார்கள்.

பெரும்புலிப் பாக்கத்தில் பல்வேறு வகுப்புகளை சேர்ந்த பொருளாதார ரீதியாக பின் தங்கிய மக்கள் குழுமி இருந்தனர். அவர்கள் மத்தியில் பூஜ்ய ஸ்ரீ பாலபெரியாவாள் அமர்ந்து தம்முடன் வந்திருந்த புலவரை திருவிளையாடல் புராணம், பெரிய புராணம், திருவாரூர் புராணம் ஆகியவற்றிலிருந்து சில கதைகளைக் கூறி விளக்கச் செய்தார்கள். தத்தம்மால் இயன்ற வகையில் எல்லாம் தர்ம கைங்கர்யங்களில் எல்லோரும் ஈடுபட்டு திருவருளும், குருவருளும் பெறலாம் என்பதை விளக்கும் வகையில் அமைந்த கதைகளை பூஜ்ய ஸ்ரீ பெரியவாள் கோடிட்டுக் காட்டி புலவர் மூலம் விளக்கச் செய்தார்.

**தாமல் சிவன் கோவில் வரவேற்பு**

பின்பு C.P. ராமசாமி ஐயர் அறக்கட்டளையில் வரவேற்பு. பட்டாபிராமன் ஐயர் இல்லத்தில் தங்கி பூஜை முடித்துக் கொண்டு பின்பு 4.30 மணியளவில் புறப்பட்டு நாலு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள பஞ்ச சக்தி பீடத்திற்கு எழுந்தருளினார்கள். பஞ்ச சக்தி பீடத்தை சேர்ந்த இரண்டு துறவிகள் வாயிலில் பூர்ண கும்ப மரியாதை மலர் சின்னங்கள் அளிக்க மேளதாளங்களுடன் வரவேற்கப்பட்டார்கள். சிறிது நேரம் தங்கி ஆஸ்ரம கட்டிடங்களை பார்வையிட்டு அனுகிரஹித்தார். வழி நெடுக இருபுறமும் கிராம மக்கள் மிகுந்த மரியாதையுடன் வந்திருந்து வணங்கி சென்றார்கள். அங்கிருந்து புறப்பட்டு நாலு கிலோமீட்டர் சென்றபோது பஞ்ச சக்தி பீடத்தில் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. ஓச்சேரி கிராமத்தில் மக்கள் பஜனை கோஷம் முழங்க பெரியதோர் வரவேற்பு அளித்தார்கள். வழிநெடுக மக்களுக்கு மஹா பெரியவர்கள், ஆதிசங்கரர் ஆகியோர்களின் படங்களும் குங்குமப் பிரசாதமும் வழங்கப் பட்டன.

காவேரிப்பாக்கம் அருகில் உள்ள கொண்டாபுரம் என்னும் இடத்தில் காமாட்சி அம்மன் சமேத பஞ்சலிங்கேஸ்வர் ஆலயத்தில் இறைவனையும் அம்பாளையும் வழிபட்டு, அங்கு இரவு தங்கினார்கள். உடல்நலக் குறைவு காரணமாக அன்று பயணம் தொடர்ந்து மேற்கொள்ளப் படவில்லை. பாத அணி அணியாமல் பயணம் மேற்கொண்ட காரணத்தால் கால்களில் கொப்பளம் மிகுந்து இருந்தது. அன்பர்கள் பாத அணி அணியுமாறு வற்புறுத்தியும் அணியாமல் அங்கிருந்து விடியற்காலையில் நான்கரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள சின்ன சமுத்திரம்,

வேத வித்யாலயாவிற்கு விஜயம் செய்து அன்று அங்கு தாங்கினார். அந்தப் பள்ளியின் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் ஊர் பிரமுகர்கள் ஸ்வாமிகளை தரிசித்து அருள் பிரசாதம் பெற்றனர். நல்ல மழை பெய்ந்தது.

மறுநாள் விடியலில் காலை புறப்பட்டு வாலாஜாபேட்டை ஊர் எல்லையில் பிரமுகர்கள் வரவேற்க அங்குள்ள சங்கர மடத்திற்குச் சென்று தரிசனம் செய்து கொண்டார்கள். இந்த மடத்து தனிச் சிறப்பு என்னவெனில் மூன்று பெரியவர்களும் சேர்ந்து இருக்கப் பாலப் பெரியவர்கள் செய்து வைத்த பாதுகா பிரதிஷ்டை இங்குதான். இத்தகைய சிறப்பு இந்தியாவில் வேறு எங்கும் நடைபெறவில்லை. அங்கிருந்து புறப்பட்டு ஊரின் மேற்கு எல்லையில் உள்ள காசி விசாலாக்ஷி சமேத காசி விஸ்வநாதர் ஆலயத்தில் தங்கி திரளாக வந்திருந்த மக்களுக்கு ஆசி வழங்கினார். மங்களாம்பாள் பள்ளி மாணவ மாணவிகளிடையே பல கேள்விகள் கேட்டு அவர்களை உற்சாகப்படுத்தி ஆசி வழங்கினார்.

தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனத்தாரின் வரவேற்பை ஏற்று இரவு அங்கு தங்கினார்கள். மறுநாள் விடியலில் புறப்பட்டு, பாரத மிகு மின் நிறுவன குடியிருப்பில் தங்கினார்கள். திரளாக அன்பர்கள் வெள்ளம் வந்து ஸ்வாமிகளை அமைதியாகத் தரிசித்து அருள்ப்ரஸாதம் பெற்றுச் சென்றனர்.

மாணவ மாணவியரை ஊக்குவிக்கும் வகையில், “சிவா சிவா, ராம ராம, ஸ்ரீ ராமஜெயம்" ஆகிய இந்த நாமங்களில் ஏதேனும் ஒன்றினை 1000, 5000, 10000 என்று எழுதி அளித்தால் அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப மகா பெரியவர்களின் அற்புதமான படம், வெள்ளிக்காசு, ஆகியவற்றைப் பரிசாக பெரியவர்கள் கரங்களாலேயே அளிக்கப்படும் என்று அறிவித்தது, மாணவ சமூகத்திடையே நல்ல எழுச்சியையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது. பல மாணவ, மாணவியர்கள், 5000, 10000-க்கு மேலும் நாமங்களை எழுதி சமர்ப்பித்து ஆசியும் பரிசும் பெற்று சென்றனர்.

மதியம் உள்ளூர் பெண்டிர்களால், சௌந்தர்ய லஹரி பாராயணம் செய்யப்பட்டது. பெரியவர்கள் மிகவும் மகிழ்வுடன் செமடுத்து தானும் உடன் சொல்லி அவர்களையும் பரவசப்படுத்தி குழுமி இருந்த பக்தர்கள் இடையே மன நெகிழ்வு ஏற்படுத்தி அனைவருக்கும் அருளாசி வழங்கினார். பெல் நிறுவனத்தில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருவளம் மேனிலைப் பள்ளியில் இரவு தங்கினார்கள். பின் அங்கிருந்து காலையில் புறப்பட்டு, 7.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேர்க்காடு அரசினர் மேல் நிலைப் பள்ளியை வந்தடைந்தார்கள். பள்ளியின் வகுப்பறை கட்டிடங்களுக்கு நடுவே மரங்கள் நிறைந்த திடல். அந்த திடலில் மரத்தடியில் பெரியவர்கள் தங்களுடைய அனுஷ்டானத்தை செய்ய அமர்ந்து, ஜெபத்தில் இருக்கும் போது, மக்கள் பெருவாரியாக சூழ்ந்திருந்தது, ஒரு தபோவன சூழ்நிலையில் தாங்கள் இருப்பதாக உணர்ந்து மகிழ்ந்து ஒருவருக்கொருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். தங்களை மறந்து, தங்கள் சூழ்நிலை மறந்து, மௌனிகளாக மக்கள் வெள்ளம் இருந்தது, ஒரு கண்கொள்ளா காட்சியாக இருந்தது என்று பங்கேற்ற ஒருவர் நெகிழ்ந்து கூறினார்.

மதியம் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி, திரு ரெத்தினம் அவர்கள் வந்து பெரியவர்களைத் தரிசித்து அருளாசி பெற்று சென்றார்கள். மாலை 1.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பெரிய மேட்டூர் கிராம மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அவர்கள் ஊருக்கு, பயணப் பட்டியலில் இல்லை என்றாலும் அங்கு சென்று, அங்குள்ள விநாயகர் ஆலயத்தில் அமர்ந்து தரிசனம் அளித்து அருளாசி வழங்கினார்கள். பின்பு மறுபடியும் சேர்க்காடு கிராமம் வந்து தங்கி இரவு நாலாயிர திவ்யப் பிரபந்தம் பாராயணம் நடக்க பெரியவர்கள் செவி மடுத்து விளக்கங்களும் கூறி அன்பர்களை ஆனந்தக் கடலில் ஆழ்த்தினார்கள்.

மறுநாள் காலை மூணு கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஆந்திர பிரதேச எல்லையின் ஆரம்பத்தில் பொதுமக்கள் பூர்ண கும்பத்துடன் வரவேற்க பிரவேசித்தார்கள். பொம்மா சமுத்திரம் என்னும் கிராமத்தில் அரசினர் இளையோர் கல்லூரியில் தங்கினார்கள். இந்தக் கல்லூரி வளாகத்தில் நிறைந்துள்ள மரங்கள் இருந்த இடத்தில அமர்ந்து அனுஷ்டானத்தை மேற்கொண்டார்கள். சுற்றுப்புற கிராமமக்கள் நூற்றுக்கணக்கான அளவில் குழுமி இருக்க உடன் வந்த புலவர்களைக் கொண்டு மஹா பாரதத்தில் ஒரு பகுதியையும் கண்ணப்பர் வரலாற்றையும் பேசப் பணித்தார்கள். மக்கள் கண்களால் பெரியவர்களையும் செவிகளால் தெய்வ வரலாறுகளையும் நுகர்ந்தபின் பெரியவர்களிடம் அருளாசி பெற்றனர். மாலை 4.30 மணிக்கு பொம்மா சமுத்திரத்தை விட்டு குடி பாலா என்ற கிராமத்தை இரவு 7.30 மணிக்கு அடைந்தனர். வழிநெடுக இருபுறமும் மக்கள் கூட்டம் ஓடி வந்து, ஆண், பெண், குழந்தைகள், முதியவர்கள் என யாவரும் பெரியவர்களிடம் வணங்கி ஆசி பெற்றனர்.

குடிபாலாவிலிருந்து ராமா புரம் என்கிற இடத்தில், ராயலசீமா ஜூட் மில்ஸ் நிறுவனத்தாரின் பூர்ணகும்ப வரவேற்பினை ஏற்று அவர்களுடைய தொழிற்சாலையையும் பார்வையிட்டு அங்கு பணிபுரியும் தொழிலாளர்களை ஆசிர்வதித்து அருளாசி வழங்கினார்கள். அங்கிருந்து லக்ஷ்மிபுரம் லியோ பிளாஸ்டிக் நிறுவனத்தில் தங்கி அனுஷ்டானத்தை முடித்துக் கொண்டார்கள். வழக்கம்போல் திரளான மக்கள் கூட்டம் தரிசனத்திற்காக காத்திருந்தனர். சிறப்பாக பிற இனத்தவர்களும் வந்து ஸ்வாமிகளை தரிசித்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மாலை 4.30 மணிக்கு சித்தூர் நோக்கி புறப்பட்டு வழிநெடுக அன்பர்களுக்குத் தரிசனமும் அருளாசியும் வழங்கி, செக் போஸ்டில் வணிக வரி அதிகாரி அவர்கள் அளித்த பூர்ண கும்ப மரியாதையை ஏற்று அவருக்கு அருளாசி வழங்கிய பெரியவாளுக்கு, சித்தூர் வீதிகளில் மேள தாளத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. திரண்ட மக்கள் கூட்டத்துடன் தபோவனப் பள்ளியில் இரவு தங்கி அருளாசி வழங்கினார்கள்.

மறுநாள் காலையில் இருந்து மாலை 5.30 மணி வரையில் மக்கள் திரண்டு வந்து பெரியவர்களை தரிசித்து அருள்ப்ரஸாதம் பெற்று மன நிறைவுடன் சென்றார்கள். மக்களில் பலர் அவரவர் தனிப்பட்ட குறைகளையும் பெரியவர்களிடம் நேரடியாக விண்ணப்பித்து அந்தக் குறை நிவர்த்திக்கான வழி முறைகளையும் அறிந்து தங்களுடைய குறை நீங்கி விட்டதாகவே உணர்ந்து பெருமிதத்துடன் சென்றார்கள். குழுமி இருந்தவர்களுக்கு நீண்டதொரு அருளாசி வழங்கி ஆசிர்வதித்தார்கள்.

மாலை 5.30 மணியளவில் வீர ஆஞ்சநேயர் ஆலயம், பொன்னியம்மன் ஆலயம் ஆகியவற்றில் தரிசனம் செய்து கொண்டு கடைத்தெரு வழியாக ஈஸ்வரன் கோவிலுக்கு போகும் வழியில் பெரியவர்களுக்கு ராமகிருஷ்ணா ஆசிரமத்தில் வடமொழியில் சுவாகதம் அளிக்கப் பட்டது. ஆச்ரமத்தின் சார்பில் ஆச்ரம நடவடிக்கைகள் பற்றி ஓய்வு பெற்ற கல்லூரி இந்தி பேராசியர் திரு. சுந்தர மூர்த்தி அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார்கள். பிறகு பெரியவர்கள் குழுமி இருந்த மக்களுக்கு நம்முடைய பாரத நாட்டு கலாசாரத்தின் சிறப்பு, உயர்வு பற்றியும் மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய தர்மங்கள் பற்றியும் நீண்டதொரு பேருரை தெலுங்கு மொழியில் ஆற்றினார்கள்.

பிறகு அருகாமையில் உள்ள அலமேலு மங்கா சமேத ஸ்ரீனிவாசப்பெருமாள் சந்நிதானத்திற்கு சென்று தரிசனம் செய்து பக்கத்தில் உள்ள காமாட்சி அம்மன் சமேத அகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் தரிசனம் செய்து அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டார்கள். அச்சமயம் திரண்டு இருந்த மக்கள் எல்லோரும் இறைவன் நாமாக்களை சேர்ந்து சொல்லி அந்த இடத்தை மேலும் புனிதமாக்கினார்கள். ஊர் பிரமுகர்கள் பெரியவருக்கு மலர் கிரீடம் சமர்ப்பித்தார்கள். அதை அணிந்து கொண்டு மக்களுக்கு தரிசனம் அளித்தது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. அதன்பின் கன்னிகா பரமேஸ்வரி ஆலயத்தில் தரிசனம் செய்து, குழுமியிருந்தமக்கள் எல்லோரும் ராம நாம பஜனை செய்த பின் அவர்கள் எல்லோருக்கும் மஹாபெரியவா படமும் காமாக்ஷி படமும் ஆதி சங்கரர், புதுப் பெரியவா, பாலப் பெரியவா உருவம் கொண்ட படங்களும் ப்ரசாதத்துடன் வழங்கப் பட்டன. பெரியவர்களை தரிசனம் செய்தவர்கள் எல்லோருமே குருப் பிரசாதம் பெற்று சென்றார்கள், மறுநாள் காலை புறப்பட்டு வழியில் சாலையில் இருக்கும் கன்னியம்மன் ஆலயம் சென்று வழிபட்டார்கள். பாதை நெடுகிலும். மக்கள் குவிந்த கரத்துடன் பெரியவர்களைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் மல்கி தரிசனம் செய்ய அவர்களுக்கு எல்லாம் இல்லத்திலேயே சொல்வதற்கேற்ப தெலுங்கிலேயே அச்சிடப்பட்ட பிரசுரங்களும் குங்குமப் பிரசாதமும் அளிக்கப்பட்டன. பெரியவர்கள் அவர்களின் பாதுகைகளை பூஜை செய்யும் பேற்றினை பல்லாயிரக் கணக்கான மக்கள் பெற்றனர்.

**பாத யாத்திரையில் பாத பூஜை சிறப்பு**

இந்தப் பாத பூஜையில் பூஜை செய்தோர்க்கு மிகுந்த ஈடுபாடும் மன நிறைவும் பக்தர்களிடையே ஏற்பட்டன. இதில் விசேஷம் என்னவெனில் பூஜைக்கு தேவையான தேங்காய், பழம் கற்பூரம், வெற்றிலை பாக்கு, கொண்டு வந்தவர்களை அமரச்செய்து, அவர்களுக்கு சங்கல்பம் செய்வித்து, தேங்காய் உடைத்து அந்த நீரினால் அவர்களே பாதுகைகளை அபிஷேகம் செய்வித்து, மஞ்சள், குங்குமம் இட்டு, பூக்களால் அர்ச்சித்து நெய்வேத்யம் செய்து கற்பூர ஆரத்தி செய்து பூஜையை அவர்களே செய்து கொள்ள பெரியவர்கள் மனநிறைவுடன் அனுமதித்தார்கள். இத்தகைய பூஜை பெரியவர்கள் தங்கி இருந்த இடத்தில் மட்டுமல்லாமல் எல்லா இடங்களிலும் பாத சாரியாக நடந்து கொண்டிருந்த போதும் நடுச் சாலையிலேயே அந்தந்த மக்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வதற்காக பெரியவர்கள் இந்த பூஜையினை செய்யச் செய்தார்கள்.

*(தொடரும்...)*

*(எனக்கு கிடைத்த பல காமகோடி மாத இதழ் புத்தகங்களில் இதுவும் இருந்தது, இதன் தொடர்ச்சியான அடுத்த புஸ்தகம் கிடைக்கவில்லை, தேடிக்கொண்டு இருக்கிறேன் என் தேடல் தொடர்கிறது)*

**ஸ்ரீ காஞ்சி பாலபெரியவாள் ஸ்வாமிகளின் வருகை**

துவாதசி அன்று இரவு என்னிடம் ஸ்ரீ பெரியவாள் பேசிக்கொண்டு இருக்கையில் "நாளைக்கு புது ஸ்வாமிகள் வரப் போகிறார்களே அவர்களுக்கு நீ என்ன செய்யப் போகின்றாய்? என்றார்கள். எனக்கும் ஸ்ரீ பால பெரியவாளை விமர்சையாக வரவேற்க ஆசைதான். நானாக ஏதாவது சொன்னால், "எதற்காக இந்த ஏற்பாடுகள் எல்லாம்? இங்கு என்ன மடமாயிருக்கு? என்று எதையாவது சொல்லி நிறுத்தி விடுவார்கள். அதனால் இங்கு வரும்போது பூர்ண கும்பம் கொடுத்து வரவேற்கலாம் என்றேன். அதன்பிறகு அவர்களுக்கே உரிய சந்தோஷத்துடன், "ஊர் எல்லையில் இந்த ஊர் பிரமுகர்கள் சிலரை, ஸ்ரீ ரெங்கநாத மிஸ்ரா, ஸ்ரீ ராமலிங்கய்யா போன்றவர்களை வைத்துக் கொண்டு வாத்ய கோஷத்துடன் பூர்ண கும்பம் கொடுத்து அழைக்கச் சொல். நான் பிரதோஷ பூஜையில் இருக்கும் சமயத்தில் வந்தால் என்ன செய்யலாம் என்று கேட்டார்கள்.

நான், பால ஸ்வாமிகளை சமீபத்தில் உள்ள ஸ்ரீ லட்சுமி நாராயண மந்திரில் இறங்க ஏற்பாடு செய்கின்றேன். பக்கத்தில் உள்ள துங்கபத்ரா கனாலில் அனுஷ்டானம் செய்யட்டும். பூஜை முடிந்தவுடன் அவர்களை அங்கிருந்து அழைத்து வரலாம் என்றேன். "சரி" என்றார்கள்.

மேலும் நீ இங்கே அவர் வரும்பொழுது, கூடை கூடையாக மல்லிகைப் பூ வாங்கி வரச்சொல்லி அவர் சிரசில் அபிஷேகம் போலாக் கொட்டு. 108 தேங்காய் சுற்றி சதுர்காய் போல அவர் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பேர்களாக அடிக்கணும். நிறைய வேஷ்டிகளை வாங்கி வரச் சொல். அவர் வந்ததும் திருஷ்டியாகச் சுற்றி வேஷ்டிகளை பல்லக்கு தூக்கிக் கொண்டு வரும் போகி ஆட்களிடம் வீசிவிடச் சொல். அவர்களுடன் வரும் எல்லோருக்கும் இரவு ஒரு விருந்து ஏற்பாடு பண்ணு. நல்ல சாப்பாடா இருக்கணும். வயிறு நிரம்ப சாப்பாடு போடு. சாப்பாடு முடிந்தவுடன் கூட வந்த அத்தனை பேர்களையும் என்னிடம் அழைத்துக் கொண்டு வந்து தரிசனம் பண்ணி வை. முடிந்ததும் இரவே, கூட வந்த வேன், லாரியில் அவர்கள் எல்லோரையும் ஏற்றி, புதுப் பெரியவாளிடம் அனுப்பி, அவர்களிடம் பால ஸ்வாமிகளைப் பத்திரமாகக் கொண்டுபோய் பெரியவாளிடம் சேர்த்து விட்டோம் என்று சொல்லட்டும். பிறகு அங்கிருந்து அவரவர்கள் ஊருக்குப் போகட்டும் என்றார்.

மேலும், "உனக்கு ரிக்வேதத்தில், ஸ்வஸ்தினோமமீதா என்ற சூக்தம் தெரியுமா?" என்றார்கள். பூரணமாகத் தெரியாது யாராவது சொன்னால் உடன் சொல்வேன் என்றேன். உடனே அந்த அனுவாகத்தை ஸ்ரீ பெரியவர்களே சொல்ல ஆரம்பித்தார்கள். உடன் நானும் சற்று தடுமாறி சொன்னேன். இருந்தாலும் அந்த சமயம் தாமரைப்பாக்கம் ஸ்ரீ தியாகராஜன் அங்கு வெளியில் நின்றபடி இந்த ஸூக்தத்தை சொன்னார். "நீயும் அவருமாக அவர் வரும்போது ஸ்வஸ்தி என்று அந்த ஸூக்தத்தைச் சொல்லிக் கொண்டே அழைத்துக் கொண்டு வா, என்றார்கள். அந்த வேத

மந்திரம் முழுக்க ஸ்வஸ்தி என்றுதான் வரும். மங்களம் என்று அர்த்தம். அதன்படி இவைகளுக்கு ஏற்பாடு செய்து இருந்தேன். இதைத் தவிர ஶ்ரீ பாலு அவருக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லி, மேள வாத்யம், பேண்டு வாத்யம் பெட்ரமாக்ஸ் லைட்டுகள், வாண வேடிக்கை போன்றவைகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார். இவை அத்தனையும் ஶ்ரீ லட்சுமி நாராயணன் மந்திரில் தயார் பண்ணச் சொல்லி இருக்கார். இது எனக்குத் தெரியாது. என்னிடம் யாரும் சொல்லவும் இல்லை.

மறுநாள் த்ரயோதசி மற்றும் பிரதோஷமானதால் பகல் உபவாசம். மாலையில் ப்ரதோஷ பூஜை. பகல் இரண்டரை மணிக்கு பெரியவா எனக்கு உத்தரவு செய்தார்கள். நானும் உள்ளே சென்றேன். ஶ்ரீ பெரியவாளுக்கு என்னிடம் "இன்னிக்கு சாயங்காலம் ப்ரதோஷமாச்சே. எதற்காக ஶ்ரீ பாலப் பெரியவா லக்ஷ்மி நாராயணர் கோவிலுக்குப் போகணும்? அங்கே வேண்டாம். நீ போய் அவர்களிடம் சற்று தாமதாமாகக் கிளம்பி ப்ரதோஷ பூஜை முடிந்தவுடன் நேரே இங்கேயே வந்துவிடும்படி சொல்லிவிட்டு வா. அவா கிளம்புவதற்குள் போய்ச் சொல். இப்பவே கிளம்பு" என்று உத்திரவு செய்தார்கள். நேரமாகிவிடவே நானும் உடன் கிளம்பி கம்பெனி காரை ஏற்பாடு பண்ணிக்கொண்டு கிளம்பினேன்.

அந்த சமயம் ஶ்ரீ பாலு என்னிடம் வந்து சற்று வருத்தத்துடன், "நான் இந்தந்த மாதிரியான ஏற்பாடுகளை செய்து லட்சுமி நாராயண மந்திரில் இருக்கச் சொல்லி இருக்கேன். இத்தனையும் கேட்டு விடுமே! ஶ்ரீ பெரியவர்களிடம் கொஞ்சம் சொல்லக் கூடாதா? என கோபித்துக் கொண்டார். உடனே காரில் இருந்து இறங்கி, ஶ்ரீ பெரியவாளிடம் இதைப் பற்றி மறுபடியும் பேசலாம் என்று வந்தேன். ஆனால், ஶ்ரீ பெரியவாள் பூஜை ஆரம்பித்து விட்ட படியால், நான் எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் ஶ்ரீ பால ஸ்வாமிகளிடம் வந்தேன். வரும் வழியில் ஒரு கிராமத்தில் அழகிய சிவன் கோவில் ஒன்று இருந்தது. அதன் பக்கத்தில் திருக்குளமும் இருந்ததை பார்த்துக் கொண்டே சென்றேன். நானும் ஶ்ரீ பாலப் பெரியவாளிடம் சென்றேன். அந்த சமயம் முதன்முறையாக அவர்கள் சன்யாசம் வாங்கிக் கொண்டவுடன் நமஸ்காரம் செய்தேன். வந்த விஷயங்களைச் சொல்லி, வரும் வழியில் சிவன் கோவிலில் இறங்கி, அனுஷ்டானமும் பண்ணி விட்டு, சிவ தரிசனமும் செய்து விட்டு வரும்படிக் கூறினேன். அருகில் இருந்த முடிகொண்டான் ஶ்ரீ வாஞ்சிநாத அய்யர், திருப்பதி பீமா லாட்ஜ் ஶ்ரீ வெங்கடேச அய்யர் இவர்களிடமும் சொல்லிவிட்டு திரும்பி கர்னூல் வந்துவிட்டேன். நானும், ஶ்ரீ பாலுவிடம் சமாதானப் படுத்தி, "எனக்கு நீங்கள் செய்திருக்கிற ஏற்பாடுகள் எதுவும் தெரியாது. அந்த ஏற்பாடுகளை ஊர் எல்லைக்கு அனுப்பி அங்கிருந்து வரச்சொல்லலாம்" என்று கூறி விட்டு அதற்கும் ஏற்பாடு செய்து விட்டேன்.

மாலை ஸ்நானம் பண்ணிவிட்டு ஶ்ரீ பெரியவாளும் ப்ரதோஷ பூஜைக்கு உட்கார்ந்தார்கள். சுமார் ஏழரை மணி இருக்கும் பூஜை முடிந்தது. அதற்குள் ஶ்ரீ பால ஸ்வாமிகளும் ஊர் எல்லையில் இருந்து மேள வாத்யத்துடன் இங்கு மில் வாசலுக்கு வந்து விட்டார்கள். நானும், ஶ்ரீ பாலு, ஶ்ரீ ஶ்ரீகண்டன், ஶ்ரீ கண்ணன், தாமரைப்பாக்கம் ஶ்ரீ தியாகராஜன், மதுரை சுந்தரம் எல்லோரும் சென்று பூரண கும்பம் கொடுத்து அழைத்தோம். வேஷ்டிகளை ஶ்ரீ கண்ணன் திருஷ்டி சுற்றிப் போட்டார். எங்கள் குழுவிலேயே அவர்தான் அனுபவம் மிக்க

சீனியர். இந்த அனுபவம் அவருக்கு அதிகம். அதன்பிறகு 108 சதுர்க்காய் விட்டது. அடுத்து மல்லிகைப்பூ சுமார் பத்து கூடைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஸ்ரீ பால பெரியவாளின் சிரசில் கொட்டி வந்தோம். தாமரைப்பாக்கம் ஸ்ரீ தியாகராஜன், ஸ்ரீ சேதுராம சாஸ்திரிகள், ஸ்வஸ்தி ஸூக்தம் சொல்லிக்கொண்டே ஸ்ரீ பெரியவாளிடம் அழைத்து வந்தோம். அந்த சமயம் பூஜை முடியும் சமயமாக இருந்தது. பூஜை முடிந்ததும் ஸ்ரீ பெரியவாளை வந்தனம் செய்து கொண்டார்கள். சுமார் பதினைந்து நிமிடங்கள் எற இறங்க அந்த பால ஸ்வாமிகளையே பார்த்தார்கள். நடு நடுவே ஒரு சில சம்பாஷணைகள் நடந்தன. பிறகு, என்னிடம் "இவர்களுக்கு தங்க எங்கே ஏற்பாடு பண்ணியிருக்கே?" என்றார்கள். அங்கே அழைத்துக் கொண்டு போ" என்றார்கள். ஸ்ரீ பெரியவாளும் வந்தவர்களுக்கு தரிசனம் கொடுத்துவிட்டு உள்ளே சென்றார்கள். ஸ்ரீ பால பெரியவாளை அவருக்கான இடத்தில் கொண்டு போய் விட்டேன்".

அடுத்து உடன் வந்தவர்களை சாப்பாடு விருந்துக்கு அழைத்துச் சென்றேன். இரவு 9.30 மணியிருக்கும். சாப்பிட்டு வந்தவர்கள் மைதானத்தில் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு இருந்தார்கள். ஸ்ரீ பெரியவாள் மட்டும் தனது அறையில் வாசற்படியில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். வந்தவர்களில் சிலர் அவர்களிடம் போய் பார்த்துக் கொண்டும் இருந்தனர். சற்று நேரம் கழித்து தனிமையில் ஸ்ரீ பெரியவர்கள் இருந்தார்கள். யாரையும் காணவில்லை என்றதால் கை தட்டினார்கள். நான் வேலையாக இருந்ததால் போகவில்லை. காஞ்சிபுரம் ஸ்ரீ சிவராமன் என்பவர் போனார். அவரிடம் என் பெயரைச் சொல்லி, "அவனைக் கூப்பிடு" என்றார்கள். ஸ்ரீ சிவராமனும் என்னிடம் வந்து கூப்பிட்டார்.

நான் ஸ்ரீ பெரியவாளிடம் வந்தேன். எனக்கும் அன்று முன் தினம் வந்தவர்களை சாப்பாடு முடிந்தவுடன் உருக்குத் திரும்ப அனுப்பி விடு என்று சொன்னது ஞாபகம் இருந்தது. ஸ்ரீ பெரியவா மறந்திருப்பார்கள், வந்தவர்களுக்கும் அசதியாகயிருக்கும் என்றதால் ஸ்ரீ பெரியவாளிடம் போகாமல் இருந்தேன். ஸ்ரீ பெரியவாள் எதையும் மறக்க மாட்டார்கள். நான் சென்றதும், "எல்லோரும் சாப்பிட்டாகி விட்டது அல்லவா? பின்ன ஏன் சும்மா இருக்கே? எல்லோரையும் கூப்பிடு. உத்தரவு வாங்கிக்கொண்டு கிளம்பச்சொல்" - என்றார்கள். எனக்கும் மனது கஷ்டமாகத் தான் இருந்தது. இப்படி வந்ததும் வராததுமாக உடனேயே கிளப்பி விடுகிறார்களே என்று. அதனால் எல்லோரையும் கூப்பிட்டு உத்தரவு வாங்கி கொள்ளச் சொன்னேன். "இருந்தாலும் இப்ப மணி 10.30 ஆகின்றது. அமாவாசை இருட்டு வழியெல்லாம் காட்டுப் பாதை மலைப்பாதை பயமாக இருக்கும். அதனால் இரவு இங்கு தங்கி விட்டு, விடியற்காலையில் அனுப்பி விடலாம் என்றேன். அதற்கு சம்மதம் கொடுத்தார்கள். இருந்தாலும் எல்லோரையும் அழைத்து இரவே உத்திரவு கொடுத்தார்கள்.

வந்தவர்களில் ஒருவர் மட்டும் வரவில்லை. அவரிடம் ஸ்ரீ பால பெரியவாளுக்கு தனி அன்பு உண்டு. புதியதாக நாங்கள் அவரிடம் கைங்கர்யம் செய்வதென்றால் கொஞ்சம் அச்சம் வேறு. இப்பத்தான் பட்டத்திற்கு வந்திருக்கார் என்பதால் அவரை மட்டும் அனுப்ப மனம் இல்லை. அவர்தான் முடிகொண்டான் ஸ்ரீ வாஞ்சிநாத அய்யர். ஸ்ரீ பால ஸ்வாமிகளோ அவரை இருந்துவிடு என்று சொல்கிறார். என்ன செய்வது என்று தெரியவில்லை. இதனால் ஸ்ரீ பால பெரியவாள் ஸ்ரீ பெரியவாளிடம் வந்து "அவர் மட்டும் என்கிட்டே இருக்கட்டும்" என்று

கேட்டார்கள். ஆனால் ஸ்ரீ பெரியவாள் அவர்கள் முன்னிலையிலேயே ஸ்ரீ வாஞ்சிநாத அய்யருக்கு உத்திரவு கொடுத்து "ஸ்ரீ புதுப் பெரியவாளிடம் பொறுப்பாக ஸ்ரீ பாலா ஸ்வாமிகளை என்னிடம் சேர்த்து விட்டேன் என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து ஊருக்குப் போ. பத்து நாள் கழித்து வேண்டுமானாலும் வா" என்றார்கள். அவரும் நமஸ்காரம் செய்துவிட்டு, உத்திரவு வாங்கிக் கொண்டார்கள். மறுநாள் விடியற்காலையில் எல்லோரும் கிளம்பி விட்டார்கள். அதற்குப் பிறகுதான் ஸ்ரீ பெரியவாள் எழுந்தார்கள்.

*(மேலே கண்ட விஷயம் பிரம்மஸ்ரீ ஏகாம்பரநாதன் மாமா அவர்கள் எழுதிய, "ஸ்ரீ மஹாபெரியவாளும், ஏகாம்பரன் ஆகிய நானும்" என்ற புஸ்தகத்தில் இருந்து எடுத்தது - பக்கம் 391-395)*


*****

# நூறாண்டு ஜோதி

ஸ்ரீ மஹாபெரியவா நூறாண்டு ஜோதி மலர் - பகுதி 3-ல் இருந்து எடுக்கப்பட்ட கட்டுரைகளை இம்மாத பூர்ண பலத்தில் சேர்த்திருக்கிறோம். ஆன்மீக அன்பர்கள் படித்துப் பயன் பெறுக. இங்கே கீழே உள்ள கட்டுரைகள் தங்களை போன்ற ஆன்மீக அன்பர்கள் படித்து பயன் பெரும் எண்ணத்துடனேயே சேர்க்கப்பட்டுள்ளது. இதில் எந்த விளம்பர நோக்கம் இல்லை. இந்த கட்டுரைகள் தெரிவிக்கும் கருத்தும், எழுத்துக்களின் சுவையும், அந்த ஆசிரியரின் பாதங்களுக்கே சமர்ப்பிக்கிறோம்.

**கீதையில் பாரத குட்டு**

**வேத பாஷ்யரதனம், முல்லைவாசல் R. கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள்**



படம்: ஓவியர் சிற்பி

"ஸ்ரீ வ்யாஸர் மகாபாரதம் இயற்றும்போது விநாயகருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதற்கிணங்க, வ்யாஸர் மள மள வென்று ச்லோகங்களாகக் கூறிவர, விநாயகர் புரிந்து கொண்டு வேகமாக எழுதி வந்தார். நடு நடுவே சற்று கடினமான ச்லோகங்களை

வ்யாஸர் கூறும்போது, அதன் பொருளை விநாயகர் சற்று யோசிக்கும் நேரத்தில், வ்யாஸர் பல ச்லோகங்களைக் கவனம் செய்து விடுவார். இத்தகைய ச்லோகங்களை பாரத குட்டு (பாரத ரஹஸ்யம்) என்பர். எனவே இப்பேர்பட்ட ரஹஸ்யங்கள் கீதையின் நடுவிலும் இருக்க வேண்டுமல்லவா! அது எந்த ச்லோகங்ம்?", என்று ஸ்ரீ பெரியவாள் என்னிடம் கேட்டார்கள். எனக்கும் ஒன்றும் தோன்றவில்லை. திகைத்தேன். உடனே ஸ்ரீ பெரியவர்கள் கூறினார்கள்: - "கீதையின் ஐந்தாம் அத்யாயத்தில 15-ஆவது ச்லோகத்தின் பிற்பாதியும், 16-ஆவதின் முன்பாதியும்: -

**"அஞ்ஞானேநாவ்ருதம் ஞானம் தேந முஹ்யந்தி ஜந்தவ**

**ஞானேந து ததஞ்ஞானம் யேஷாம் நாசிதமாத்மன."**

இதன் பொருளாவது - ஆத்மஸ்வரூபமான ஞானத்தை, வெகுநாட்களாக அஞ்ஞானம் மறைத்துள்ளது. ஆகவேதான் யாவரும் தத்வமறியாமல் உடல் முதலியவற்றில் மோஹமடைந்து துக்கப்படுகின்றனர். ஆனால் யாருக்கு இந்த அஞ்ஞானம் ஞானத்தினால் அகற்றப்பட்டு, அழிக்கப்பட்டு விடுகிறதோ அவர்களுக்கு அந்த பரம்பொருள் விளங்குறது." (மோகம் மடிந்து விடும்). இங்கு இரு சிக்கல் (ரஹஸ்யம்) இருக்கிறது. ஞானமும், அஞ்ஞானமும் - ஒளியும், இருட்டும் போல ஒன்றுக்கொன்று விரோதமானது. ஞானமாகிற ஒளியை அஞ்ஞானம் - ஒளியும், இருட்டும் போல ஒன்றுக்கொன்று விரோதமானது. ஞானமாகிற ஒளியை அஞ்ஞானம் எவ்வாறு மறைக்கும்? அப்படியே மறைத்து விட்டால் பிறகு அதே ஞானத்தினால் எவ்வாறு விலக்க முடியும்? இந்த சிக்கலான விஷயத்தை விநாயகர் யோசித்து வந்தாராம். அதற்குள் வ்யாஸர் பல ச்லோகங்களைத் தயார் செய்துவிட்டார்".

இவ்விதம் கூறிவிட்டு, நிற்காமல், ஸ்ரீ பெரியவர்கள் மேலும் கூறிய விளக்கம் மிக மிக அருமையானது. "மேற்கூறிய குட்டிற்கு (சிக்கலுக்கு) கீதையிலேயே விளக்கம் வருகின்றது, என்னவென்றால்,

"தேஷாமேவானுகம்பார்த்தம் அஹமஞானஜம் தம.

நாசயாம்யாம்யாத்மபாவஸ்தோ ஞானதீபனே பாஸ்வதா".

- [X-II]

என்ற ச்லோகத்தில் விளக்கம் கிடைக்கிறது. சுத்தமான ஸ்வரூபஞானத்தை அஞ்ஞானம் (அறியாமை) மறைத்து விட்டாலும், 'ஆத்மபாவம்' என்கிற அகண்டமான பொருளைப் பற்றிய ஸாக்ஷத்காரமாகிற மனோவ்ருத்தியில் "ஸ்த" இருந்து கொண்டு பிரதிபலித்து (being reflected on a special stage of mind called Atma Sakshatkara) நிற்கும் போது ஞானத்தின் சக்தி அதிகரித்து, அஞ்ஞானத்தை பொசுக்கி விடுகிறது. ஞான ஒளி தடையின்றி அகிலத்திலும் ப்ரகாசிக்கிறது! சூரியனுடைய கிரணங்கள், பஞ்சு போன்ற பொருட்களை எரிக்காத போதிலும், ஒரு குறிப்பிட்ட பூதக் கண்ணாடி மூலம் செலுத்தப்பட்ட சூரிய கிரணங்கள் பஞ்சை எரித்து விடுகின்றன அல்லவா! எனவே நமக்கு அம்பாளின் க்ருபையினால் ஸாக்ஷத்காரம் ஏற்பட வேண்டும்". என்று கூறி பெரியவர்கள் விளக்கியபோது எல்லோருடைய மனத்திலும் ஒரு பேரானந்தம் ஏற்பட்டது.

*****